சீரணி

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

என்னை நன்றாக
இறைவன் படைத்தனன்



தன்னை நன்றாகத்
தமிழ் செய்யுமாறே
— திருமூலர்



## திருப்பணிச்சபை வெளியீட்டு மலர்

# கமலா பிஸ்கட் தொழிற்சாலை

## சண்டிருப்பாய்

<u>எங்களிடம்</u>

சுவைமிக்க

பிஸ்கட் வகைகள்

கேக் வகைகள்

பாண், பணிஸ் மற்றும்

சுவிட்ஸ் வகைகளும்

பெற்றுக் கொள்ளலாம்.

★

***For Delicious:***

BISCUITS BREAD CAKES & SWEETS ETC.

# KAMALA
# BISCUITS FACTORY

**SANDILIPAY, JAFFNA.**

D.BOOSAANI

உ

சிவமயம்

சண்டிருப்பாய் - சீரணி

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் திருப்பணிச் சபை மலர்

வட்டுக்கோட்டை,
இந்துக்கல்லூரித் தமிழாசிரியர்
பண்டிதர். திரு. த. சுப்பிரமணியன் அவர்களாற்
றொகுக்கப்பட்டது.

திருப்பணிச் சபை வெளியீடு

சோபகிருது - சித்திரை

1963

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | |
| | பாராட்டுகின்றோம் | |
| 1. | பூர்விக இலங்கையும், நாகரும் ... ... | 1 |
| 2. | சக்தியின் மகிமை ... ... ... | 3 |
| 3. | அம்மை வழிபாடு ... ... ... | 6 |
| 4. | இறையன்பில் திளைத்தல் ... ... | 9 |
| 5. | தேவி தோத்திரம் ... ... ... | 11 |
| 6: | திருப்பணிச் சபை ... ... ... | 15 |
| 7. | திருப்பணிச்சபை அறிக்கை ... ... | 19 |
| 8. | திருவிழாத் தத்துவம் ... ... ... | 18 |
| 9. | ஸ்ரீ நாகபூஷணியம்மை யுற்பவ வரலாறு ... | 20 |
| 10. | தேரின் தத்துவம் ... ... ... | 27 |
| 11. | கோயில் கொண்டருளிய தெய்வம் ... | 29 |
| 12. | சுவாமியார் கௌரிபாலா | |
| 13. | திரு. கா. தம்பையா அவர்கள் | |
| 14. | திரு. கா. சண்முகம் ஆசாரியார் | |

இலங்கை ஆட்சிமன்ற மேல்சபை அங்கத்தவர்

*திரு. சு. நடேசபிள்ளை* B. A., B. L., F. R. E. S. *அவர்கள் அளித்த*

# அணிந்துரை

சிரணி ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆலயத் தேர்த் திருப்பணி நிறைவேறி வருகிறதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இத்திருப்பணியை ஏற்று நிறைவேற்றிய திருமதி தம்பையா வள்ளியம்மை அவர்களின் பக்தித் திறம் மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

இத்திருப்பணி நிறைவேறுவதை முன்னிட்டு இவ்வாலயத்தின் வளர்ச்சியில் ஈடுபட்ட திருப்பணிச் சபையினர் ஒரு திருப்பணி மலரை வெளியிடுகின்றனர்.

இது சிரணி நாக பூஷணி தேவியின் திருவடிகளுக்கு உகந்த சமர்ப்பணமாகும்.

**சு. நடேசபிள்ளை**
6-5-63

# பாராட்டுகின்றோம்

சிரணித் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநாகபூஷணி அம்மன் பேரில் மலரொன்று வெளியிட எமது திருப்பணிச் சபை தீர்மானித்தது. அம்பாள் திருவருள் கூட்டச் செந்தமிழ்ச் சேவையுஞ் சமயப்பணியும் இலட்சியமாகக்கொண்ட பண்டிதர் திரு. த. சுப்பிரமணியம் அவர்கள் மலரை நறுமணம் கமழப் புட்பிக்கும் பெரும்பணியை ஏற்றுக்கொண்டனர். மலர் உருவாக வேண்டுமெனத் தீர்மானித்த பத்து நாட்களுக்குள் பண்டிதரின் அயராமுயற்சியினால், அறிஞர் பலரின் சொல்வண்ணஞ் சோபிக்க, மலர்தெய்வீக அழகுடனும், அம்பாள் சித்திரங்களுடனும் சிறக்க, அடியார்முன்னிலையிற் சமர்ப்பிக்கின்றோம். பண்டிதரின் அரியசேவையைப் பாராட்டுகின்றோம். நன்றி நவில்கின்றோம்.

சமய உண்மைகளை வரலாற்று உரைகல்லில் உரைத்துத் தெளிந்தவற்றைச் செந்தமிழமுதத்தில் தோய்த்துக் கட்டுரைகளாகக் குறைந்த கால எல்லைக்குள் உபகரித்த அறிஞர்களுக்கும் எமது பாராட்டும் நன்றியும் உரித்தாகுக.

ஏழுதினங்களில் மலரைப் புட்பிக்கச்செய்த ஸ்ரீ காந்தா அச்சகத்தாரின் அருஞ்சாதனை வியக்கத்தக்கதாகும். அழகும் பொலிவும், கண்டாரைக் கவரவும் மெய்யடியாரைப் பக்தி பரவசந்திலூட்டவும் வல்லதுமான மலரைத் திருவருளால் உருவாக்கித்தந்த ஷை அச்சகத்தாருக்கும் எமது பாராட்டும் நன்றியும் உரித்தாகுக.

இம்மலரை உவந்துபார்வையிட்டு அணிந்துரை உதவிய இலங்கை ஆட்சிமன்ற மேல்சபை அங்கத்தவர் ஸ்ரீ சு. நடேசபிள்ளை அவர்களுக்கு எமது மனமுவந்த நன்றி உரியதாகுக.

இத்திருப்பணிக்காக வேண்டிய உதவி நல்கிய அன்பர்கள் அடியார்களுக்கும், சிறப்பாகச் சங்கானையம்பதி தினகரன் பிரதிநிதி, திரு. க. சிவஞானம் அவர்களுக்கும் எமது நன்றியைக் கூறுகின்றோம்,

சிரணி
6-5-63

இங்ஙனம்
திருப்பணிச்சபையினர்.

# பூர்விக இலங்கையும் நாகரும்

குமரி கண்டத்தின் பல பிரிவுகளில் ஒரு பிரிவுதான் இலங்கை. இலங்கை ஒரு சிறு தீவு. எனினும் கீழைத் தேயங்களுக்கும் மேலைத் தேயங்களுக்கும ஒரு கேந்திரத்தானமாக இலங்கை அமைந்துள்ளது. இதனால் இலங்கை ஒருசரித்திரப்பிரசித்தி வாய்ந்த இடமாக விளங்குகின்றது.

படைப்புக்காலந்தொடங்கி இலங்கையிற் தமிழர் வாழ்ந்து வருகின்றனர். ஆண்டுவந்த மன்னர்களும் அவர்களாகவே விளங்கினர். காலந்தோறும் இலங்கையைத் தரிசித்த யாத்திரீகரும் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களும், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலானோரும் பிறரும் தத்தமக் கியைந்த பெயர்களை இலங்கைக்கு வழங்கி வந்தனர்.

அவை குமரி நாடு, ஈழம், தார்சிஸ், தபோவனம், குபேரநாடு, இராவணன் நாடு, இயக்கநாடு, இயக்கதீவு நாகதீவு, இரத்தினத்துவீபப், பதுமராகதுவீபம், தித்திலத்துவீபம், மாணிக்கதுவீபம், சிங்கதுவீபம் குணதிசை ஏதென், தாமிரவருணி, சிலோன், சிறீலங்கா முதலியனவாகும்.

## நாகர்

ஈழநாட்டிலே ஆதியில் வாழ்ந்த இயக்கர், இராக்கதர், நாகர் எனப்படுவோர் யாவருந் திராவிடர் எனப்படுந் தமிழினத்தைச் சேர்ந்தவரே யாவர். இவர்களில் மிகவுஞ் சீர்திருந்திய தமிழரே நாகர் ஆவர். இவர்கள் நாகரீகத்திலே மிகவும் மேம்பட்டவர்கள். பலகலைகளிலுஞ் சிறந்தவர்கள்.

இலங்கையின் மத்திய பகுதிகளில் இயக்கர் வாழ்ந்தனரெனவும் வடபகுதியில் நாகர் வாழ்ந்தனரெனவும் மகாவம்சம் கூறுகின்றது. இந்த இயக்கரும் நாகரும் "எலு" என்னும் ஒரு கிறைவில்லாத பாஷையைப் பேசிவந்தார்களென்றும், அதுகாரணமாக இவர்கள் 'ஈழர்', எனவும், இலங்கை ஈழம், ஈழமண்டலம் எனப் பெற்றதெனவும், கூறப்படுகின்றது. இங்ஙனமே ஏனைய பெயர்களும் இலங்கைக்கு வழங்கப்பட்டுவந்தன.

தமிழர்கள் வாழ்ந்தநாடு தமிழகம் எனவாயினமைபோன்று,ஈழர் வாழ்ந்தமைபால் ஈழமெனப்பட்டது. அஃதே போன்று நாகர்கள் வாழ்ந்தமையால் நாகதீவு, நாகநாடு எனவும் வழங்கப்பட்டது.

நாகர்கள் பற்றிப்பல கருத்துக்கள் கூறப்படுகின்றன. இவர்கள் பாதலத்தில் வசிக்கும் ஒரு சாதியார் என்பர் ஒரு சாரார். நாகத்தைப் போன்ற தலையுள்ளமையால் நாகரெனப்பட்டனரென்பர் இன்னொருசாரார். நாகத்தை வணங்கியமையால் நாகர் எனப்பட்டனரென்பர்மற்றொருசாரார். இவற்றினாலே நாகரென்பது எக்காரணங் கொண்டுள்ளதென்பது கூறமுடியாதிருக்கின்றது.

பல ஆராய்ச்சியாளர்கள் ஆதிகாலத்து மங்கோலிய வர்க்கத்தினரின் சந்ததியினரே நாகர்எனக் கூறுகின்றனர்.

இன்னும் இவர்கள் ஆரியரின் இந்திய வருகைக்கு வெகுகால முன்னரே இந்தியாவுக்கு வந்தனரெனவும், இந்தியாவின் வடபகுதியில் நாகர்கள் வாழ்ந்த காலத்து (இன்றும் வாழ்ந்து வருகின்றனர்) ஆரியர்வருகை யாரம்பித்ததெனவுஞ் சில சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர்.

இந்தியாவின் வடகிழக்குப்பகுதியில் நாகமலை என்று ஒருமலை உளது. ஆதிக்குடிகளான நாகர்கள் இன்னும் இங்கு வாழ்கின்றனர். இவர்கள் அங்கமிகள், செங்கமர்கள், சேமர்கள், லோஹ்தர்கள், ஆவோக்கள், சங்குகள், துக்கோமிகள் எனப்படுவர். நாகர் பிரித்தானிய ஆட்சியின் கீழ் வந்தமை 1866-ம் ஆண்டளவிலாகு மென்பர்.

ஆரியருடைய நெருக்குதலினாலே நாகர்கள் பின்வாங்கி, இந்தியாவின தக்கிண சமவெளியிலும் இலங்கையிலும் வாழ்ந்தனரென்பர் "1800-ஆம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்" என்னும் நூலின் ஆசிரியர் திரு. வி. கனகசபைப்பிள்ளை அவர்கள் "நாகர்கள் ஒருகாலத்தில் இந்தியா, இலங்கை பர்மா ஆகிய நாடுகளின் பெரும்பகுதியையாண்டனர்" எனவும், தக்கிணத்திலே நாகர் தலைநகரம் ஒன்று விளங்கியிருந்தல் கூடுமெனவுங் கூறுகின்றனர்.

நாகமன்னர்கள் இலங்கையிலே கந்தரோடை, நாகர்கோயில், நயினாதீவு, களனி (கல்யாணி), மாதோட்டம் முதலான இடங்களிலிருந்து ஆட்சிபுரிந்தனரெனவும் சரித்திரங்கள் கூறுகின்றன.

இவற்றால் நாகர் இலங்கையின் ஆதிக்குடிகளென்பதும், நாகரிகத்திலே சிறந்தவர்களென்பதும் ஆட்சிச் சிறப்பு வாய்ந்தவர்களென்பதும் புலனாகின்றது.

---

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல் போற்றி —புராணம்

# சக்தியின் மகிமை

தமிழ்ப் பண்டிதர், பிரசங்கசபாமணி,
பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேஸ்வரஐயர்

சராசரங்களின் சிறப்பைப் பார்க்கிறோம். இயற்கை என்ற ஒரு கூட்டமிருக்கிறது விஞ்ஞானத்தில் சிறந்த "வில்ஸன்" என்பவர் ஒரு சத்தியால் உலகம் நிலவுகின்றது. என்றார். தூரதேசம் போகவேண்டாம். நாமே சற்றுச்சிந்தித்தால் உண்மை புலப்படும. சைவசமயப்பெருநூல்கள் சிவம், சத்தி என்று கூறும். உலகியல் ஆண், பெண் என்ற பகுப்பால் பரந்து வருகின்றது. சத்தி காரியமாகவுள்ளது உலகம். உலகில் எப்பொருளும் சத்தியின் சத்தியால் நின்று நிலவுகின்றமை வெளிப்படை. கோடை மேகம் குமுறுவதுபோல் உலக அரசியல்களும் ஆரவாரிக்கின்றன.

*சத்தியருள்:-*

தேவர்கள் அசுரர்கள் என்று பலபிரிவுள்ளதாக அறிகின்றோம். ஒவ்வோர் பகுதியாரும் தாம்தாமே பெரியவர்கள் என்பது உண்டு. மக்களும் சத்தியின் மாயா விலாசத்துட் சிக்கி நாமே சர்வாதிகாரிகள் என்று இறுமாப்பர். முக்குணவசத்தராய ஆன்மாக்கள் பிறவாப் பேறடையவும் சத்தியின் கடைக்கண்ணோக்கந்தான் வேண்டும்.

"சத்திதன் வடிவேதென்னில்
தடையிலா ஞானமாகும்"

என்பது சமயநூல்விளக்கம். அருள் மேனி கொண்டு சிவம், சத்தி, ஆகிய இருவரும் விளங்காதிருந்தால் உயிர்கள் உயர்கதிபெறமுடியாது. வாய் வல்லபம் மரணத்தின்முன் நிற்கமாட்டாது. "போம்பொழுதருந்துணை புரிந்த புண்ணியம்"

*உலக தாய் தந்தையர்:—*

வாகர்த்த இவ சம்பிருக்தௌ
வாகர்த்தப் பிரதிபத்தயே!
ஜெகத; பிதரௌ வந்தே
பார்வதீ பரமேஸ் வரௌ!!

சொல்லும் பொருளும் போலச் சேர்ந்து பிரிக்கப்படாத பார்வதிபரமேஸ்வரர்களே உலகத்திற்குப்பிதாமாதாக்கள் என்பது கருத்து. மணிவாசகரும்,

"அம்மையே அப்பா" என்று கூறுகின்றார். பராசத்திபற்பல அவதாரங்களில் தொழில்வேறுபாட்டால் பற்பல நாமங்களைக்கொள்வாள். துர்க்காதேவி அசுரர்களை அழித்துத் தேவர்களைக் காத்தாள். "தேவர்கள் அவ்வம்மையை இப்படித் துதித்தனர்."

ஸர்வ ஸ்ரூபே ஸர்வேசே
ஸர்வ சக்த சமந்விதே!
பயேப்யஸ் த்ராஹி நோதேவி
துர்க்கே தேவி நமோஸ்துதே!!

எல்லா வடிவாகவும், எல்லாவற்றை யும் ஆள்பவளாகவும் எல்லாச்சத்தியு டையவளாகவும் விளங்கும் தேவியே! பயங்கரமான வற்றிலிருந்து எங்களைக் காப்பாய். துர்க்காதேவியே! உனக்கு நமஸ்காரம்.

வணக்கமே இணக்கமாகும். மக்கள் என்பதன் பொருளறிந்தால் தெய்வம் குரு, பெரியோரை வணங்குவரல்லவா? எல்லா வணக்கங்களும் இறைவரையே சாரும். இறைவர் வணங்க அவரின் மேலானவர் யாருமில்லை.

"சேர்ந்தறியாக்கையானை" என்ற மணிவாசகர் தெளிவாக உண்மை யுரைக்கும். சத்தி, சிவம், விநாயகர், குமரநாயகன், பைரவர் வீரபத்திரர் என்ற பல்பேத ஆலயங்கள் எங்கு முள்ளன.

ஆலயங்களே மக்களின் வழிபாட் டுக்கு உரிய இடங்கள். ஆலயங்களை நித்திய நைமித்திய முறைப்படி நடாத் தல் வேண்டும். சிவாலயங்களைத் தீக்ஷையுடையவரல்லாதோர் புகுந் கெடுப்பது பெருங்குற்றமாகும். சைவ சமய உண்மைகளை வீண் ஆடம்பரச் செலவை ஒளித்துச் சமயப் பிரசங்கங் களைச் செய்வித்தல்வேண்டும். காவல ரவர்கள் ஒலிபெருக்கி வைத்துப் பிர சங்கஞ்செய்யவில்லை. வேதம், ஆகமம், தேவாரம், திருவாசகம் என்பனவற் றின் கோஷம் எந்தக் கோயிலில் இல்லையோ அது இறைவன் சாந்நித் தியு இடமாகாது. எட்டுக்கிரகங்களுக் கும் வணக்கம். அக்கிரக கூட்டத்தால் மூடிய கதவுகள் திறக்கப்பட்டன. வேதமந்திரம், கோளறு பதிகம் பேரொலிகாட்டின, இவைநிற்க.

சத்தி சிவமாந்தன்மை இன்றேல் உலகமே இல்லை. பின்வரும்பாடலை நோக்குங்கள். "கண்டனவெலா மோனவெளியதாய்க் கருதி அஞ்சலி செய்" யுங்கள்.

*யாவும் சத்திமயம்:*

சத்தியுஞ் சிவமுமாய தன்மை
  யிவ்வுலகமெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும பெண்ணும்
  உணர் குண குணியுமாகி
வைத்தனனவளால் வந்த வாக்க
  மிவ்வாழ்க்கை யெல்லா
மித்தையுமறியார் பீடலிங்கத்தின்
  இயல்பு மோரார்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐவ கைத் தொழில்களாலும் சிதநிரிக்கும் பீடலிங்கவுயர்வுகளை அறியாரிருந் தென்? போமென்? மக்களானோர் அன்புடன் ஆடிப்பாடிப் போற்றி னல் வருவது பேரின்பவூற்றேயாகும். பேதமையே பிறவிக்கு ஏதுவாகும்.

*இருசிவபுண்ணியம்:*

முற்கூறியபடி சத்தியை வழிபாடு செய்வது அவசியமாகும். நயினைதீவில் நாகபூஷணி அம்பிகை பேரருள் மழைபொழிவதை யாவரும் அறிவர். ஐம்பதாண்டுகளுக்குமுன் சிந்தையின் சீர்மிக்க அன்பரொருவர் வாயிலானே சீரணிநாகம்மை தோன்றிக் கருணை



# திருமதி தம்பையா வள்ளியம்மை

சத்தியின்றிச் சிவம் இல்லை என்பர் பெரியோர். பாற்கடலிற் பள்ளிகொள்ளும் பரந்தாமன் துணையெனவே விளங்கும் இணையிலா அழகி. வெள்ளியங்கிரியிலுறை வள்ளலின் பக்கலில் விரும்பிஅமர்ந்து நாலெட்டறங்களையும் நானிலமுய்யப் புரிந்த அறத்தனிச் செல்வி அனையாள். அருட்செறிவிலே திலகவதி. உள்ளன்பிலே புனிதவதி. முல்லைக்குத் தேர்கொடுத்தான் பாரி. அம்பிகைக்குத் தேர் செய்யா எண்ணினான் வள்ளல் தம்பையா. அவன் எண்ணிய எண்ணியாங்கே தேவிக்குத் தேரீந்தாள் திருவாட்டி வள்ளியம்மை.

வாழ்க அவள் புகழ்!

யோடு அன்பர் பூசை ஏற்று விளங்கு கின்றார். அங்கே நித்திய ஆராதனையுடன், அதன் தாழ்வு நீங்கிப் பேரின்பு கூட நைமித்திகமும் நடத்திவருகிறார்கள். வாகனங்கள் செய்வித்து அளித்தல், தேர் செய்வித்து மாதாவாகிய நாகபூஷணியை ஆரோகணித்துவரத் தரிசித்தல் பெருஞ்சிவ புண்ணியப்பேருகும். தேர் ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவசத்துவம் என்பவற்றை விளக்கும். அன்றியும் பத்து நாள்களிலும் ஒவ்வோர் தத்துவங்களையும்களைந்து ரதோற்சவத்தில் பேரருள்பெற்று, ஆன்மாக்கள் இன்புறும்பெற்றிதிகழும் தீர்த்த தினம் அருளில்மூழ்கிச் சகல உபாதிகளும் விடுபட்டு இன்பவெள்ளத் திட்டிளைத்து இன்புறுந்தன்மை தெரிவிப்பதாகும். ஆகவே, சிரணி நாகம்மை திருவருளைத் துதிப்போமாக.

மணியே! மணியினொளியே!
ஒளிரு மணிபுனைந்த
அணியே! யணியுமணிக் கழகே!
யணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்குமருந்தே!
யமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை நின்பதும
பாதம் பணிந்தபின்னே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

## நீதிவாக்கியங்கள்

இந்தச் சரீரம் நமக்குக்கிடைத்தது. நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம்பெறும் பொருட்டேயாம்.

இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

கடவுளையும், அவரைவழிபடும் நெறியையும், அதனல் எய்தும் பயனையும், உனக்குப்போதிக்கும் அருள் வடிவாகிய ஆசாரியர் ஒருவரே உன் உயிர்த்துணை; ஆதலால், அவரை ஒருகாலமும் மறவாதே.

ஈசுரபத்தியும் நல்லொழுக்கமும் உள்ளபிதா மாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.

நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும் பொழுது செய்யாதொழிவையாகில், பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது.

— ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்.

# அம்மை வழிபாடு

திரு. க. சி. குலரத்தினம் ஆசிரியர்

அன்னை வழிபாடு அனாதியானது. அரசன் தாயன்புடன் குடிகளைக் காப்பாற்றுதல் தகும் என்பது கம்பர் கருத்து. தாயொக்கும் அன்பின் தயரதன் பரிபாலனஞ் செய்தான் என்பர். இறைவன் தாயவன். உலகுக்கெல்லாம் தன் ஒப்பில்லாத் தாயவன் என்பது திருஞான சம்பந்த சுவாமிகள் திருவாக்கு. பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து தமக்கருள வேண்டும் என்று மாணிக்கவாசக சுவாமிகள் வேண்டுகின்றார். பெண்கொடியாக நடந்ததுலகமே என்பது திருமூலர் திருவாக்கு.

உலகம் நடைபெறுவதற் பொருட்டுப் பிரிவு நிலையில் இறைவன் சிவன், சக்தி வடிவில் திகழ்கின்றான். ஒன்றின்றேல் மற்றது இல்லையாம் என்பர். ஒன்றுக்கொன்று ஏற்றத் தாழ்ச்சி கூறல் அறிவீனம்.

பெண்ணின் குணப் பெருக்கத்துக்குத் தாய்மை என்றுபெயர். அன்புப் பெருக்கம், தன்னலமின்மை அடக்கம், இரக்கம், பொறுமை ஆகிய உயர்ந்த குணங்கள் கொழுகொம்பாகப் பற்றிப்படரும் உருவமே பெண்மை. பெண்மையின் பெருமையை அன்னையில் அறியலாம். அன்னையே பெரிய வரப்பிரசாதி.

அன்னை அகிலாண்ட கோடி எல்லாம் ஈன்றவள் என்றாலும் பின்னரும் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூபமயில். அவளுடைய ஆனந்த ரூபத்தில், அன்பு கருணை வெள்ளமாகப் பிரவாகிக்கும் அற்புதத்திருக்கோலத்தை, அட்ட சித்திகல் அன்பருக்கருள விருது கட்டிய பொன் அன்னமே, அண்ட கோடி புகழ்காவை வாழும் அகிலாண்ட நாயகி என் அம்மையே—எனத் தாயுமான சுவாமிகள் போற்றுகின்றார்.

சக்திவழிபாடு இந்தியாவிலும் இலங்கையிலும் இன்னும் கடல்கடந்த பல பிறநாடுகளிலும் பண்டு தொண்டே நிகழ்ந்து வந்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் தேவிகோயில், அம்மன்கோயில், காளிகோயில், துர்க்கை கோயில் என அம்மைக்குக் கோயில்கள் பலவாக இருக்கின்றன. துர்க்கை பழைய தெய்வம். காளி எனினும் அவளே, காளி கருநிறத்தவள். அவளே பொன்நிறத்தவளாய்க் கௌரி எனவும் பேசப்படுகின்றாள்.

துர்க்கையின் உருவம் பழைய கற் சிலைகளில் களிநடம் புரிகின்றன. எட்டுத்திருக்கரங்களும், சூலம், தனு, கசம், அங்குசம், சங்குசக்கரம் முதலாய படைக்கலங்களும் கொண்டு மகிடன் தலைமேல் நிற்கும் உருவம் அது.

பெண்ணின் குணப் பெருக்கம் வழிபாட்டுக்குரியதாய்விட்டது. கல்வி செல்வம், வீரம், வெற்றி முதலாய சிறந்த பேறுகளுக்கு அதி தெய்வங்களாகப் பெண்மையின் வடிவங்களையே எம் முந்தையோர் வகுத்தனர். அவர்களேயன்றிக் கிரேக்கர் முதலாய நாகரிகமாந்தரும் அங்ஙனமே கொண்டனர்.

எம்முந்தையோர் அம்மையின் அருளைவேண்டி அவளை மலைமகளாகவும், அலைமகளாகவும், கலைமகளாகவும் வழிபட்டனர். இம்மூன்று மூர்த்தங்களே பராசத்தி, லட்சுமி, சரஸ்வதி என நவராத்திரிக் காலங்களில் அருள் செய்கின்றன.

புராதன நகரங்களான காசி, காஞ்சி, மதுரை எனும் முப்பெருமிடங்களில் முறையே விசாலாட்சி, காமாட்சி, மீனாட்சி என அம்மையை வழிபட்டனர். இறைவன் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்தருளினான். இறைவி முப்பத்திரண்டு அறங்களைச் செய்தருளினாள். அவள் அறுபத்துநான்கு கலைகளையும் உணர்த்துபவள்.

அன்னை அபிராமியை மெய்யன்போடு பட்டர் ஒருவர் வழிபட்டார். அவர் அபிராமிப்பட்டர் எனவே பெயரும் பெற்றார். அவர் அபிராமி மேல் பாடியருளிய அந்தாதியில் அவளை வழிபட்டால் என்ன என்ன எளிதில்கிடைக்கும் என்று ஒரு பட்டியலையே தயாரித்துள்ளார்.

தனந்தரும் கல்வி தரும் ஒரு
நாளும் தளர் வறியா
மனந்தரும் தெய்வ வடிவும்
தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்ப வர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள் அபி
ராமி கடைக் கண்களே.

இறைவன் 'என்று வந்தாய்' என்று எதிர்ப்படுவான் என்பர் அப்பர் சுவாமிகள். தம்மை வலியவந்தாண்டு அருள்செய்த நேசத்தை என்சொல்லி ஏத்துவேன் என்று அபிராமிப்பட்டர் அழுகின்றார்.

ஆசைக் கடலில் அகப்பட்
டருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற் படஇருந்
தேனைநின் பாதமெனும்
வாசக் கமலம் தலைமேல்
வலியவைத் தாண்டு கொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர்
பாகத்து நேரிழையே.

இனிக்கலைமகளாகிய சரஸ்வதியை வழிபட்டு இன்பங்கண்ட குமரகுருபர சுவாமிகள் ஒரு கேள்விகேட்கின்றார்; அதுவும் சரஸ்வதியிடமேதான் அந்தக்கேள்வி. உன்னைத்தந்து என்னைக் கொண்ட உனக்கு என்னால் என்ன லாபம். நானன்றே பண்டமாற்றில் லாபம் அடைந்தவன் என்பது மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனைக் கேட்

கும் கேள்வி. ஆனால் குமர குரு பர சுவாமிகள்;

மண்கண்ட வெண்குடைக் கீழாக
　　மேற்பட்ட மன்னரும்மேன்
பண்கண் டளவிற் பணியச்செய்
　　வாய் படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
　　டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ
　　சகல கலாவல்லியே.

என்று பாடுகின்றார். இந்நிலையிலே தான் கம்பரும் தாம் கலைமகளிடம் அருளை வேண்டித் துதிக்குமுன்பே அவள் அருளைப் பொழிந்தாள் என்பர்.

ஒருத்தியை ஒன்றுமி லாவென்
　　மனத்தின் உவந்துதன்னை
இருத்தியை வெண்கம லத்திருப்
　　பாளை எண்ணெண்கலை தோய்
கருத்தியை ஐம்புல னுங்கலங்
　　காமல் கருத்தையெல்லாம்
திருத்தியை யான்மற வேன்திசை
　　நான்முகன் தேவியையே.


அன்னையை ஆற்றல் எனும் சக்தியாகப் பார்க்கும்போது அவள் விஞ்ஞான உலகிலும் பெரும் அற்புத சாதனைகளைச் செய்யத் தோன்றாத் துணையாகவும், உறு துணையாகவும் இருக்கிறாள். அறிஞர்கள் நெஞ்சப் புலத்திலே பிறந்து, கவிஞர்தம் நாப் புலத்திலே நடந்து, கலைஞர்தம் கைத் திறத்திலே அன்னை உருவாகியுள்ளாள் என்பர் கவிமணியவர்கள். அவள் உருவம் பார்க்கும் இடம் எல்லாம் தோன்றுமென்பர் அபிராமிப் பட்டர்.

பார்க்கும் திசைதொறும் பாசாங்
　　குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமலர் ஐந்தும்
　　கரும்பும் என் அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு
　　மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை
　　மேல்முத்து மாலையுமே.

அவள் உருவம் எங்கும் இன்பம் பயப்பன என்பது பாரதியார் வாக்கு. அவள்கோதகன்ற தொழிலுடைத் தாகி, குலவு சித்திரம் கோபுரம் கோயில், ஈது அனைத்தின் எழிலுடை உற்றாள் இன்பமே வடி வாகிடைப் பெற்றாள்.

என்றைக்கும் நீதுணையம்மா வெண்ணைவியிறந்து விடு
மன்றைக்கும் ஓடிவந் தஞ்சல் என்பாய்.

— நமச்சிவாயப்புலவர்.



சிரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்

# இறையன்பில் திளைத்தல்

வித்துவான் பொன். முத்துக்குமாரன் அவர்கள் B. O. L.

ஒரு தாய்க்கு ஒரே ஒரு பிள்ளையுள்ளது. அந்தப் பிள்ளையிடத்தில் அவள் வைத்தள்ள அன்போ அளவில்லாதது. அவளது நினைப்பெல்லாம் அப்பிள்ளையைப் பற்றியதுதான். அவள் தன் பிள்ளையோடு இருக்கும்போது அதன் அழகு அவள் கண்களைக் கவர்ந்து பரவசப் படுத்தும். அதன் நடையைக் கண்டும், முதிராத மழலையைக் கேட்டும் ஆனந்தமடைவாள். பிள்ளையின் செய்கையைப் பிறரிடமெல்லாம் சொல்லிச் சொல்லிப் பேரின்பம் கொள்வாள். மலர்களைக் கண்டால் மாலை தொடுத்து அப்பிள்ளையை அலங்கரித்து மகிழ அவள் ஆசை கொள்வாள். நல்ல பொருள்களை எங்கேனும் கண்டால் சொன்ன விலை கொடுத்தாயினும் அவற்றை வாங்கித் தன் பிள்ளைக்கு உதவத் தவிப்பாள். அவள் அப்பிள்ளையிடத்தில் வைத்துள்ள அன்பினால் தன் சுகத்தையும் தன் நல்வாழ்வையும் மறந்தே போனாள். அவள் கொண்டுள்ள அன்பைக் கண்டோர் அவள் பித்துப் பிடித்தவள் என்றே பேசலாயினர். ஒரு தாயினுடைய இந்த விதமான அன்பு உலக வாழ்விலுள்ள சாதாரண மக்களுக்கு ஒரு விந்தையான விஷயமேயாகும்.

தாயானவள் தன் பிள்ளையினிடத்தில் வைத்த அந்த அன்பைப் போலச் சில பெரியார்கள் தலையாய அன்பினைச் சிவபிரானிடத்தே வைத்த சிறப்பினைப் புராணங்களிலே கேட்கின்றோம். அந்தப் பெரியார்கள் மனைவியோடும் மக்களோடும் வாழ்ந்தாலும், வேளாண்மை, வாணிகம் முதலிய பல்வேறு தொழில்களையே செய்தாலும் அவர்கள் மனத்தில் நீங்காது நிலைத்திருந்த பொருள் இறைவனே. அவர்கள் நினைந்து, நினைந்து இன்புற்ற பொருள், பேசிப், பேசிப் ஆசை பெருக்கிய பொருள், எல்லாம் அந்த இறைவனே மனைவி மக்கள் உற்றார் அயலார் எல்லாரையும் மறந்து அப்பெரியார்கள் சித்தத்தைச் சிவன்பாலே வைத்திருந்தனர். தேடிய செல்வத்தை எல்லாம் சிவன் பொருட்டே செலவிட்டனர். சோலையிலே மலர்களைக் கண்டால் அவர் மாலை தொடுத்து இறைவனுக்கு அணிவித்து மகிழ்ந்தனர். வயலிலே விளைவித்த நெல்லெல்லாம சிவனார்க்கும் அடியார்க்கும் திருவமுது அளித்தற்குப் பயன்பட்டன. வயிற்றிலே பசி நின்று வருத்த, பொறுக்க முடியாத வறுமை வந்து பொருந்தினாலும் அவர்கள் மனம் பொருள் மேல் பற்றுக்கொள்ளாது, சிவதொண்டிலேயே திளைத்து நிற்கும். கையிலுள்ள பொருளெல்லாம் தீர்ந்து விட்டன. கடன் தருவாரும் இல்லை. மனைவியும் மக்களும் பட்டினியால் ஒரு நாளன்றிப் பலநாளாய் வாடி மெலிகின்றார்கள். இந்நிலையில் எதிர்பாராத விதமாகச் சொற்ப பொருள் கிடைக்கின்றது. சிவனடியார்கள் அப்பொருளைக்கொண்டு உடனே தம் குடும்பத்தி

னரின் பசியைத் தீர்க்க நினையார். சிவபிரானுக்கும் சிவனடியார்க்கும் யாது தொண்டு செய்யலாம் என்றே ஆவல் கொண்டவராய் அப்பொருளைச் செலவிடுவர். நல்ல காலத்தில் மட்டுமன்றி அல்லலின் எல்லை வந்தபோதும் இறைபணியிலே ஆர்வத்தோடு ஈடுபடும் உள்ளமே தலையாய அன்பின் இருப்பிடமாகும்.

அத்தகைய சிவனடியார்களிடத்திற் காணும் அன்பு நம்மிடத்திற் சிறிதேனும் இல்லை. அந்த அன்பு இந்த ஒருபிறவியிலே மட்டும் சம்பாதிக்கத்தக்க எளிய பொருளன்று. அது பல பலபிறவிகள் தோறும் வளர்ந்து வளர்ந்து பெருகும் அருமையுடையது. பகுத்தறிவுடையவர்களாகிய மக்கள் தமக்கு அருமையான உடலையும், வலிமையும அழகும் வாய்ந்த உறுப்புக்களையும், நல்லறிவையும் செல்வத்தையும் மற்றும் வேண்டும் சாதனங்கள் பலவற்றையும் தந்த இறைவனை நன்றியறிதலுடன் நினைய வேண்டுவது தக்க செயல் மட்டுமன்று, தலையாய கடமையுமாகும். அந் நன்றியறிதலின் பயன் அவ்விறைவனிடத்தில் அன்புண்டாதலேயாகும். அந்த அன்பு சிறிது உண்டாகுமாயின் இறைவனுக்கு நன்மையான செயல் ஏதாயினும் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் மனத்தில் எழும். அவ்வெண்ணம் சிவதொண்டு செய்தவனிலேயே திருப்தியடையும். "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்" என்றபடி நாம் இறைவனுக்குத் தொண்டு செய்யும் தோறும் நாம் இறைவனிடத்தில் வைத்த அன்பும் உறுதியாய் வளரும். அந்நிலையில், சிவனடியார்களைப் போல முற்றும் சிவப்பணியிலேயே நாம் ஈடுபடாவிடினும் தினந்தோறும் ஒவ்வொரு பொழுதிலாயினும் சிவனை நினைக்கவும், சிவதொண்டு செய்யவும் தவறாத நியமம் கைகூடும். அவ்வாறு நமது கருமங்களுக்குள்ளும், ஆசாபாசங்களுக்குள்ளும் ஒரு சிறு பொழுதாவது உண்மையன்போடு இறைவனை நினைக்கவும இறைபணியில் நிற்கவும் வல்லோமாயின் அந்த அன்பே பல துளி பெருவெள்ளமாதல் போலவும், ஒவ்வொரு சதம் சேர்ந்து ஒரு கோடி ரூபாய் ஆதல் போலவும் பெருகி வளர்ந்து பேரின்ப வாழ்வைத்தரும்.

ஆரென்று அறியத்தகாத நிலையில் இருந்த நம்மை மானிடப் பிறவிதந்து ஆளாக்கிய இறைவனுக்கு நம்மையே நாம அர்ப்பணிக்காவிடினும் அப்பெருமானுக்கான பணிகளை இயன்றளவாயினும் செய்யாதிருத்தல் நன்றி மறந்த பாவமாய் முடியும். நம் மனையை அழகுற அமைப்பதில் செலவிடும் பணத்தில் ஒரு சிறு தொகையினை ஆலயப் பணிக்கு உரிமையாக்க வேண்டும். நம் உடலை வளமாக்க உணவுக்குச் செலவிடும் பொருளில் ஆலய நித்திய நைமித்தியங்கட்கு ஒரு சிறிய அளவினை அன்போடு அளிக்க வேண்டும். பொருளையும் புகழையும் பெருக்குதற் பொருட்டு நாம் செய்யும் முயற்சியில் ஒரு தினையளவு முயற்சியை ஆலயத்தைக் கூட்டுதல், மெழுகுதல், விளக்கிடுதல், மலர்வனம் பேணுதல் ஆகிய பணிகளில் பயன்படுத்த வேண்டும். இவையெல்லாவற்றோடும் சேர, நாம் எம் தந்தையான இறைவனோடு ஒரு சிறிது பொழுதாவது கலந்து பேசி மகிழவும் வேண்டுமல்லவா? இறைவனோடு பேசுவதற்கு ஒரே ஒரு வழியே உண்டு. தனிமையில் ஒருமையுடன் அவனை நினைவதே அந்த வழி. அவ்வாறு இறையன்பைச் சிறிது சிறிது வளர்ப்பதே நாம் மக்களாய்ப் பிறந்த நோக்கமுமாகும். அதனை நாம் செய்யத் தவறினால் மீண்டும் மீண்டும் நாம் இங்கு வந்து பிறத்தற்குரியவரே.

# தேவி தோத்திரம்

## விநாயகர் வணக்கம்

### திருச்சிற்றம்பலம்

இகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

— கந்தபுராணம்

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுனை
யென்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
ளொன்று மரும்பொரு ளேயரு ளேயுமையே யிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே.

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வவடிவுந் தரு நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரு நல்லன வெலாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரு பூங்குழ லாளபி ராமி கடைக் கண்களே.

— அபிராமியந்தாதி

தொடுக்குக் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறை பழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகு நறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கை யகழ்ந்

தெடுக்குந் தொழும்ப ருளக் கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடு
மிளமென் பிடியே யெறி தரங்க
முடுக்கும் புவனங் கடந்து நின்ற
வொருவன் திருவுள்ளத்தி லழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்து மிள
வஞ்சிக் கொடியே வருகவே!
மலயத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே!

பெருந்தே னிறைக்கு நறைக் கூந்தற்!
பிடியே வருக! முழு ஞானப்
பெருக்கே வருக! பிறை மௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடு நல்
விருந்தே வருக! மும்முதற்கும்
வித்தே வருக! வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
விளைவே வருக! பழ மறையின்
குருந்தே வருக! அருள் பழுத்த
கொம்பே வருக! திருக் கடைக்கண்
கொழித்த கருணைப் பெரு வெள்ளங்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக! பசுங் குதலை
மழலைக் கிளியே வருகவே!
மலயத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக! வருகவே!

— மீனாட்சியம்மைபிள்ளைத் தமிழ்



ஆலய வாயிலின் தோற்றம்

அயல் கண் டனையஞ் சலித்தேத்தும்
அன்னை வருக! பெருங் கருணை
ஆழி வருக! தீவினை யேம்
ஆவித்துணையே வருக! விடம்
துயில்கண் டனையம் பலத்தாட்டும்
சுடர்பொற் கொடியே வருக! விளஞ்
சுகமே வருக! நறுங் குதலை
தோற்றுங் கிளவி எனு மதுரம்
மயில்கண் டனையர் செவிக் கூட்டும்
பசுங்கோ கிலமே வருக! என்றும்
பருகத் தெவிட்டாச் சுவை யமுதப்
பாவாய் வருக! பசுந் தோகை
மயில் கண்டனைய இளஞ் சாயல்
மாதே வருக! வருகவே!!
வளங்கூர் குழந்தைப் பதியமுத
வல்லி வருக! வருகவே!!

—அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்

உலையிலிடு மெழுகதுபோ லுருகிமனம்
வெறுங்கூடாய் உலர்ந்து வாடி
நிலைகுலைந்து மதிமயங்கி நின்றுமிகப்
பரதவித்தல் நீதியோ சொல்
கலைமகளே வடிவணங்கே கமலமுகத்
திருமாதே கருணை யாளே
மலைமகளே அறந்தழைக்கும் சொக்கர் பங்கில்
மீனுட்சி மதுரைத் தாயே

— மீனுட்சியம்மைதோத்திரம்

ஆகமது கூனித் தளர்ந்துரோ மம்வெளுத்
தைம்புல னொடுங்கி மேலாம்
அறிவழிந் தைமே லெழுந்ததி தத்தினுயி
ரணுகுமக் காலை தனிலே

வேக வெங் கடமைபிடர் நெளியவரு ஞமனெற்கு
விடு கயிறு முடுகியடுமுன்
வினையேனை யஞ்சலென் றுனதுநா யகருடன்
வெள்ளை விடை மீதேறியே
பாகமுற வந்துநின் றடிமைகொண் டெனையும் நீ
பாதுகாத் தருள வேண்டும்
பைங்குலைத் தெங்கிளஞ் சோலைசெறி நயினை நகர்
பண்டு கொண்டுறை செல்வியே
நாகமடர் தாருவென மேவிமுனி வோர்களுறை
நாடிவரு கோப விடமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

— நயினைநாகேஸ்வரியம்மை பதிகம்

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகியெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சத்தியென் றுன்
நாமமேயுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச்சரிக்க வசமோ
ஆரணிசடைக்கடவுள் ஆரணி யெனப்புகழ
அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவையரசே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே.

— தாயுமானவர் பாடல்

உ
அம்பிகை துணை

## சண்டிருப்பாய்

# சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவத்தானத் திருப்பணிச் சபை

*தலைவர்*

**திரு. வ. கணபதிப்பிள்ளை**

*உப தலைவர்*

**திரு. மு. ஐயாத்துரை**

*கௌரவ காரியதரிசி*

**திரு. வ. செல்லத்துரை**

*கௌரவ தனாதிகாரி*

**திரு. க. இராசையா**

*கௌ உப தனாதிகாரி*

**திரு. சி. முத்துத்தம்பி**

*நிருவாகசபை அங்கத்தவர்கள்*

| | |
|---|---|
| 1. திரு.ச. கந்தையா | 8. திரு. நா. கந்தையா |
| 2. ,, தி. நமசிவாயம் | 9. ,, வ. இளையராசா |
| 3. ,, த. குலநாயகம் | 10. ,, மு. தம்பையா |
| 4. ,, சி. குமரையா | 11. ,, சி. நடராசா |
| 5. ,, மா. சிவமணி | 12. திருமதி த. வள்ளியம்மை |
| 6. ,, அ. செந்தில்வடிவேல் | 13. ,, இ. யூகரத்தினம் |
| 7. ,, வே. மயில்வாகனம் | 14. ,, செ. சற்குணம் |

*போஷகர்கள்*

| | |
|---|---|
| 1. திரு. க. தம்பையா<br>மலாயன் இளைப்பாறிய அரசகருமவினைஞர் | 3. திரு. பொ. சண்முகராசா<br>அவதானப் பாதுகாவலதிகாரி |
| 2. ,, A. பாலசுப்பிரமணியம்<br>சமூக நலவிருத்தி அதிகாரி | 4. ,, இ. தருலேசு<br>மாவட்டத் தபால் மேலதிகாரி |

# சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

# திருப்பணிச் சபை அறிக்கை

சண்டிருப்பாய் — சீரணி நாகபூஷணியம்மன் தேவத்தானத்தின் கைங்கரியங்களை நடாத்தும் பொருட்டு 10-10-62 புதன்கிழமை பி. ப. 5-30 மணியளவில் சண்டிருப்பாய் -கட்டுடை மக்கள் கூடிய கூட்டத்திலே மேற்படி திருப்பணிச் சபை நியமிக்கப்பட்டது.

இச்சபையினர் கட்டுடை, சண்டிருப்பாய், சங்கானை, அளவெட்டி முதலான இடங்களில் திருப்பணிக்காக நிதி சேர்த்துக்கொண்டிருக்கின்றனர். திரட்டப்பட்ட நிதி கொண்டு மிகவும் அவசியமான சில பல திருப்பணிகளை நிறைவேற்றியுள்ளனர்.

மகா மண்டபத்துக்கும் கோயில் மண்டபத்துக்குமிடையேயுள்ள வெளி தகரத்தினலே வேயப்பட்டுள்ளது. மகா மண்டபம் யாகசாலை முதலான இடங்களிலே சிலமடைந்த தகரப் பீலிகள் யாவும் புதுக்கியமைக்கப்பட்டுள்ளன. வடக்கு வீதிக் கொட்டகைத் தீராந்தி மாற்றியமைக்கப்பட்டுச் செப்பனிடப்பட்டுள்ளது. வசந்த மண்டபத்தின் கூரையும் முகடும் பழுது பார்க்கப்பட்டன.

மூல்லைத்தீவுக் காட்டிலிருந்து நாகமரம் ஒன்று வாங்கிக் கொடித்தம்பம் இருத்தி அமைக்கப்பட்டது. கோபுரத் தூண்களின் இருமருங்கும் அம்பிகையின் அபிநய ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

உள்வீதியில் கலியுக வரதன் முருகப்பெருமான் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளார். தேரோடும் வீதியின் மணற்பாங்கான இடங்கள் செப்பனிடப்பட்டுள்ளன.

மேலும் செய்வதற்காகச் சபையினர் போட்டுள்ள திட்டங்கள்:—

1. வசந்த மண்டபம் பழுதுபார்த்தல்.
2. யாக மண்டபக் கொட்டகையைச் செப்பனிட்டுக் காறை போடுதல்.
3. வைரவப் பெருமானுடைய ஆலயத்தை யாகசாலைக்குப் பக்கத்தில் அமைத்தல்.
4. பூரணமாகாத தேரோடும் வீதியைப் பூரணமாக்குதல்.



நிற்பவர்கள் மேல்வரிசை இடம்—வலம்:— திருவாளர்கள் அ. செந்தில்வடிவேல், சி. குமரையா, மு. ஐயாத்துரை, மு. தம்பையா
ச. கந்தையா, நா. பாலசுப்பிரமணியம், ஸ்தபதியார், திரு. கா. சண்முகம்,

நிற்பவர்கள் நடு; இடம்—வலம்— க. இராசையா, க. தம்பையா, திருமதி பூகரத்தினம், திருமதி வள்ளியம்மை, இ. நகுலேசு வே. மயில்வாகனம்

இருப்பவர்கள் இடம்—வலம்— வ. இளையராசா, வ. செலலந்துரை, பரமகுரு—கந்தையா—கௌரிபாலா, வ. கணபதிப்பிள்ளை, சி. முத்துத்தம்பி

எங்களுக்குக் கிடைத்த நிதியுதவி போதாமையினாலே பல இடங்களிலுமுள்ள அன்பர்களின், அடியார்களின், வள்ளல்களின் ஆதரவை இன்புடன் எதிர்பார்க்கின்றோம்.

ஒவ்வொரு பூரணைத் தினத்திலும் சபை கூடி நிருவாக வேலைகள் பற்றிக் கலந்துரையாடி வருகின்றது.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவுமற்றவர் வாய்ச்சொ லருளீர்!
ஆண்மையாள ருழைப்பினை நல்கீர்
மதுரத்தேமொழி மாதர்களெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் கெவ்வகையானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!

— பாரதியார்

என வணக்கத்துடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
வ. செல்லத்துரை
கௌரவ காரியதரிசி

திருப்பணிச்சபை
10-5-63.

---

அருளுவாய் அனைத்துயிர்க்கும் அன்னையாகி
ஐந்தொழில்கள் புரி ஆதி சக்தியே! நின்
கருணையின்றிக் கணக்கிலாக் கஷ்டமுற்றுக்
கதறிநிற்கும் உயிர்களுளத் தின்று சூழ்ந்த
இருளகல வழியேதும் இல்லையென்ற
ஈடற்ற உறுதியுடன் இந்த ஏழை
உருகி நின்றுன் சந்நிதியில் கேட்ட யாவும்
உவந்தளிப்பதுன்கடனும் ஒப்பில் தாயே!

— க. இராமச்சந்திரன்

# திருவிழாத் தத்துவம்

ஆலயங்களிலே பத்து அல்லது பன்னிரண்டு முதலான நாள்கள் மிகவும் சிறப்பாகப் பூசைகள் நடத்தி, அங்குள்ள மூர்த்திகளின் திருவுருவங்களைப் பலவிதமான வாகனங்களின் மேல் எழுந்தருளச் செய்து நடாத்துவிக்கும் விழா திருவிழா எனப்படும். இது மகோற்சவம் எனவும் கூறப்படும்.

[மஹா — (பெரிய) உத் — (உயர்வான) ஸவம் — (சிருட்டி முதலான காரியங்கள்) உயர்ந்த படைத்தல் முதலான ஐந்தொழில்களைக் குறிக்கும் குறி ஆகும்].

திருவிழாக்கள் பல ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுவதால் பல ஊர்களிலும் பல விதமாக நடைபெறுகின்றன. திருவிழா ஆரம்பிப்பதற்கு முதலுள் மண்ணெடுப்பதும் முளையிடுவதும் நடைபெறுகின்றன. மண்ணைப் பதம் பண்ணி முளையிடுவது படைத்தலை (சிருட்டியை)க் குறிக்கின்றது.

*1-ந் திருவிழா:—* கொடியேற்று விழா வெனப்படும். இடப உருவத்தைக் கொடிச் சீலையில் வரைந்து அதற்குப் பூசைகள் புரிந்து கயிற்றிலே கட்டிக் கொடிமரத்தின் உச்சிக்கு ஏற்றுவது கொடியேற்றமாகும்.

சமம், விசாரம், சந்தோஷம், சாதுசங்கம் எனப்படும் நான்கு குணங்களையும் கால்களாக வுடையது இடபம் எனப்படும் நந்தி. அது வெள்ளை நிறம் பொருந்திய பரிசுத்தமாகிய தரும தேவதை. ஆன்மாக்களும் பரிசுத்தமுடையவர்களாகி, அந்நான்கு குணங்களையும் பொருந்தி விளங்குவார்களானல் இறைவன் அவர்களை அவர்களிருக்கும் நிலையிலிருந்து மிகவும் மேலான நிலையில் உயர்த்தி வைப்பானென்பதை இவ் விழா குறிக்கின்றது. திருவிழாவின் முதலிலே இக்கொடியேற்றம் நிகழ்வதன் காரணம் திருவிழாவுக்கு வரும் அடியார்களை உயர்பதமடையச் செய்யும் பொருட்டாக இவ்விழா நாட்களிலே இறைவன் சிறப்பாக எழுந்தருளி அருள் செய்யப் போகின்றான் என்பதாகும். இது தூல நீக்கம் எனப்படும்.

*2-ந் திருவிழா:—* சத்தி, சிவம் இரண்டையும் முறையே அநுட்டித்து ஒன்றுபடுத்திச் சுவர்க்க மத்திய, பாதலமென்னும் மூவகையினருக்கும் அருள்பாலிப்பது. இது சூக்கும நீக்கம் எனப்படும்.

*3-ந் திருவிழா:—* முக்குணம், முக்குற்றம், முப்பற்று, முப்பிறப்பு, மூவினை முதலானவற்றின் நீக்கத்தைக் குறிக்கும்.

*4-ந் திருவிழா:—* நாற்கரணம், நால்வகைத் தோற்றம் என்பன

வற்றை நீக்குதலையும் நான்குவேதங்களைத் தோற்றுவித்தலையும் குறிக்கும்.

5-ந் திருவிழா:— ஐம்பொறி, ஐந்தவத்தை முதலானவற்றை நீக்குதலையும், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்துவித பஞ்சகிருத்தியமாகப் பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என நின்று ஐந்தொழிலியற்றலையும் குறிக்கும்.

6-ந் திருவிழா:— காமம், குரோதம், உலோபம், மோசம், மாற்சரியம் எனப்படும் ஆறுகுற்றங்களையுங் களைந்து ஆன்மகோடிகளுக்கு அருள் புரிதலைக்குறிக்கும்.

7-ந் திருவிழா:— தேவர், மனிதர், நீர்வாழ்வன, விலங்கு, ஊர்வன, பறப்பன, தாவரம் எனப்படும் எழுவகைப்பிறப்பு நீக்கத்தையும் குறிக்கும். அம்பிகை சிவபூசை செய்வதும் முப்பத்திரண்டு அறங்களைப் புரிவதும் இந் நாளாகுமென்பர்.

8-ந் திருவிழா:— இது தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல்பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை யென்னும் இறைவனுடைய எண் குணங்களையுங் குறிக்கும். மேலும், இந்திரன், அக்கினி, இமயன், நிருதி, வாயு, வருணன், குபேரன், ஈசானன் என்னும் எட்டுத்திக்குப் பாலகரை ஆராதித்து, அட்டநாகம், அட்டயானை, கற்பகதரு, காமதேனு இவைகளை வருவிப்பதையுங் குறிக்கும்.

9-ந் திருவிழா:— பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவம், சிவம், சத்தி, நாதம், விந்து எனப்படும் சிபபேதங்களைக்குறிக்கும் இது நவபேதம் எனவும்படும். மேலும், நவக்கிரகங்களைப் பூமண்டலமழைத்து ஆன்மாக்களுக்கு வேண்டிய வரங்களை அவரவர் நல்வினை தீவினைகளுக்கேற்ப அருள்பாலிப்பதையுங்குறிக்கும்.

10-ந் திருவிழா:— இது இறைவனது அநுக்கிரகம் பெற்ற ஆன்மாக்கள் அவனுடைய திருவருள் வெள்ளத்திலாழ்ந்து இன்புறுதலைக் குறிக்கும். தீர்த்தமாடி ஆலயத்தினுள்ளே சென்று வணங்குதல் மோட்ச மடைதலைக் குறிக்கின்றது. இத்தகைய தத்துவங்களைப் பத்துநாள் விழாக்களிலும் நன்கு அறிந்து உணர்ந்து பரமபொருளைப் பரவுவார் பரகதியடைவர்.

---

தேவர் போற்றும் அம்மையாம்
தேரில் வாற அம்மையாம்
ஆவலோடு எம்மை யன்பாய்
அரவணைக்கும் அம்மையாம்.

— ஞா. ம. செல்வராசன்

## சண்டிருப்பாய் — சீரணி

# ஸ்ரீ நாகபூஷணி யம்மை யுற்பவ வரலாறு

ஈழத் திருநாட்டில் சைவ சமயம், தமிழ்ப்பண்பு என்னும் இவற்றின் தொன்மைக்கும் சிறப்பிற்குஞ் சின்னமாக விளங்குவன திருக்கேதீச்சரம், திருக்கோணசலம் என்னும் இருசிவத் தலங்களாகும்.

அதுபோன்று தேவிவழிபாட்டுக்கு யாழ்ப்பாண நாட்டின் இருகண்களாக விளங்குவன நயினை, சீரணி என்னுமிடங்களில் விளங்கும் நாகபூஷணியம்மை யாலயங்களாகும்.

எக்காலத்து எவராற்தாபிக்கப் பட்டதெனவறியப்படாது மிகப்புராதனப்பெருமை வாய்ந்து விளங்குவது நயினுதீவு நாபூஷணியம்மையாலயமாகும். முன்னெரு காலத்திலே இத்தீவில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை, தம்மைப் பூசித்துத் தவஞ்செய்த நாகமொன்றை ஆபரணம் போலத்தமது திருமேனியிலணிந்து அதற்கிருந்த சாபத்தை நிவிர்த்தி செய்தருளியமையால் நாகபூஷணியம்மை என்னுந் திருநாமமுடையராயினர்.

### திருவருட்சத்தி

உலகத்துக்கருத்தா சிவபெருமான். அநாதி மலமுத்த பரமபதியாகிய சிவபிரான் அங்கிங்கெனுதபடி யெங்கும் பிரகாசமாய்ப் பாலிற் படுநெய்போல வியாபித்திருப்பினும், ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்யுமாறு தயிரில் நெய்போலத் திருக்கோயிலிலுள்ள சிவலிங்கம் முதலிய திருமேனியிடத்தும், ஆசாரியரிடத்தும், சிவனடியாரிடத்தும், வெளிப்பட்டு நின்று அருள் செய்தருளுவார். அவர் ஊரும், பேரும், உருவும், ஒப்பும் இல்லாத அளவிறந்த ஆனந்தமுடையராயிருப்பினும் மெய்யடியாரின் வழிபாட்டுக்கு வெளிவந்து ஊரும், பேரும், உருவுமுடையராய் விளங்குவர். அவர் அக்கினியிற் சூடு போல அபின்னமாயுள்ள திருவருளேயே சத்தி (வல்லமை) யாககொண்டு விளங்குவர்; அந்தத் திருவருட் சத்தியும் அன்பரது வழிபாட்டுக்கு வெளிவந்து தோன்றிய மூர்த்தபேதங்களால் பல்வேறு நாமங்கள் கொண்டு அழைக்கப்படும்.

பரமசிவனின் இடப்பாகத்திலெழுந்தருளித் திருவருட் சத்தியாய்ப் பஞ்ச கிருத்தியத்திற்குங் காரணமாய் விளங்கும்போது உமாதேவி என்னுந் திருநாமத்தோடு விளங்குவாள். காஞ்சிபுரத்தின் கண்ணே ஏகாம்பரநாத சுவாமியினிடப்பாகத்திலே காமாட்சி யென்னுந் திருநாமத்தோடு விளங்கி முப்பத்திரண்டு தருமங்களையும் ஆன்ம கோடிகள்



உற்சவ மூர்த்தி

ஈடேறும் பொருட்டாகச் செய்தருளுவாள். சிதம்பரத்திலே நடராசப் பெருமானுர் ஆனந்த தாண்டவஞ் செய்யும் பொழுது நிருத்த சாட்சியாகச் *சிவகாமசுந்தரி* யென்னுந் திருநாமத்தைப் பெறுவாள். மதுரைச் சோமசுந்தரப் பெருமான் திருமருங்கில் எழுந்தருளி இறைவன் சௌந்தர பாண்டியனுன போது *தடாதகைப் பிராட்டியார்* என்னுந் திருநாமத்தைப் பெறுவாளாயினள். காசி க்ஷேத்திரத்திலே விசுவநாதப் பெருமானின் பாங்கரில் *விசாலாட்சி* என்னுந் திருநாமம் பெற்றாள்.

இன்னும் இலக்குமி, சரஸ்வதி, காயத்திரி, சாவித்திரி, துர்க்கை, காளி, புவனேஸ்வரி, வாலாம்பிகை, பெரிய நாயகி, மனோன்மணி, பருவதவர்த்தனி, தையல் நாயகி, இராசராசேஸ்வரி, வீரலக்குமி, விஜயலக்குமி, தனலக்குமி, முதலான அனந்த திருநாமங்களைப் பெற்று ஆன்ம கோடிகளுக்கு அருள் புரிவாள். நவராத்திரி தினங்களில் முறையே மகேஸ்வரி, கௌமாரி, வாராகி, மகாலக்குமி, வைணவி, இந்திராணி, பிராஹ்மி, நரசிம்மி, சாமுண்டி எனப்படும் நவ சொரூபிகளாக விளங்கி அருள் புரிகின்றாள். ஆன்மாக்கள் சோர்வடைந்த காலத்து நவ சக்திகளை யூட்டி யூக்கப்படுத்தி யீடேற்றியருள்புரிவாள்.

ஐந்தலை நாகம் பூசிக்கும் பொருட்டாக இறைவன் நாகேஸ்வரியம்மை சமேத நாகேஸ்வர மூர்த்தியாக எழுந்தருளியிருக்குந் தலம் தென்னிந்தியாவில் விளங்கும் திருநாகேச்சரமாகும். இத்தலத்தைச் சந்திரன், சூரியன், ஐந்தலைநாகம் என்பன பூசித்தமை,

"சந்தி ரன்னொடு சூரியர் தாமுடன்
வந்து சீர்வழி பாடுகள் செய்தபின்
ஐந்த லையர வின்பணி கொண்டருள்
மைந்தர் போல்மணி நாகேச் சரவரே."

என்னும் திருநாவுக்கரசு சுவாமிகளின் திருநாகேச்சரப் பதிகத்தால் அறியக்கிடக்கின்றது.

ஐந்தலை யரவு பூசிக்கும் பொருட்டு இறைவன் அருட்சத்தி வடிவாய் அமைந்த ஆலயங்கள் நாகபூஷணியம்மை ஆலயங்களாகும்.

## திருச் சிரணி நாகபூஷணி

தம்மை வழிபட்டுப் பூசித்த நாகமொன்றைத் தம் மருமைத் திருமேனியில் ஆபரணமாய்ப் பூண்டகாரணத்தால் அத்தேவியும் நாகபூஷணியம்மை யென்று அழைக்கப்படுவாள். அந்த நாகபூஷணியம்மை சண்டிருப்பாய்ப் பதியைச் சார்ந்த சிரணிப் பதியிற் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய திருவருள் மகிமை மிகவும் பெரிது.

புண்ணிய பூமியாகிய இந்தியாவிலேயுள்ள காரைக்காற் பதியினின்றும் யாழ்ப்பாணம் காரைநகரிற் குடியேறிய வேளாளர் குலத்தின் வழிவந்த குலநாயக முதலியார் பூநிதி வல்ல முதலியார் என்ற ஒருவர் இருந்தார். அவரது கோத்திரத்

திலே வாழையடி வாழையாக வந்த விசுவநாத முதலியாரின் வழித்தோன்றலாகிய சின்னத்தம்பி சண்முகநாதர் என்பவர் சண்டிருப்பாய்ப்பதி கனகாம்பிகையார் ஐயம்பிள்ளை முருகேசர் மகள் தெய்வானைப் பிள்ளையைத் திருமணம் புரிந்தார். இவர்கள் தமது அருந்தவத்தாற் பெற்றெடுத்த பிள்ளை முருகேசபிள்ளை என்பவராவர்.

இவர் பிறந்து அறிவு தலைப்பட்ட பருவந்தொட்டு அருள், அடக்கம், வாய்மை, பொறை, நீதி, சீவகாருண்ணியம், பெரியோரைப் பேணல், குருவழிபாடு முதலான குணநலன்களில் மேம்பட்டுச் சிறந்த சீலராய் மிளிர்ந்தார். விபூதி, உருத்திராக்க தாரணம், ஸ்ரீ பஞ்சாக்கர செபம், சிவாலய சேவை, சிவபுராணம் படித்தல், கேட்டல், சிந்தித்தல் முதலான வழிபாடுகளை யுடையராய் வாழ்ந்து வருவாராயினர்.

அக்காலத்திலே இப்பதியிலே சாத்திரியர் சண்முகம் பொன்னம்பலம் என்ற ஒருவர் இருந்தார். அவர் ஒரு இயந்திரம் வைத்துப் பூசைசெய்த பிரபல்யமான சாத்திரம் சொல்லி வந்தார்.

இவருடன் இராமு முத்தர் என்னும் ஒருவர் வசித்து வந்தார். சண்முகம் பொன்னம்பலம், இயந்திரத்தைச் சரிவரப் பூசிக்காமையினல் அவர் வீட்டிற் சில துர்ச் சகுனங்கள் நிகழ்ந்தன. அவை முத்தர் என்பவருக்குப் பிடிக்காமையாலும், யந்திரம் இராக்காலத்தே கலகலப்பான பேரொலி செய்தமையாலும் அதனை அப்புறப்படுத்த நினைந்தார். ஒரு நாள் முத்தர் நன்ருய் மதுபானம் அருந்திவிட்டுக் குறித்த யந்திரத்தையும் அத்துடனிருந்த பொருள்களையும் பெட்டியுடன் எடுத்துச்சென்று வீட்டினருகாமையிலுள்ள ஒரு அலரிப் பூம்பற்றைக்குட் போட்டுச் சென்றுவிட்டார். இவ்வண்ணமாக எமபெருமாட்டி நாகபூஷணியம்மை இங்குள்ள அன்பர்கள் பலரிடத்தே கனவிற் தோன்றி "நான் நயினை நாகபூஷணி, என்னை ஆதரியுங்கள்" எனக் காட்சி யளிப்பாளாயினள். "நாமெல்லாரும் வறியவர்கள் தாயே! எங்ஙனம் எங்களால் ஆதரிக்க முடியும்" என அன்பர்கள் கூறி வருந்தினர்கள். "என்னை ஆதரியுங்கள் தொண்டர்கள் வருவார்கள். செல்வம் செழிக்கும், நாடு நலம்பெறும், வாழ்வு வளம் பெறும்" என்று அவ்வன்பர்களுக்கு அருள் பாலித்துக் குறித்த அன்பராகிய முருகேச பிள்ளைக்கு அருளுமாறு அவருக்குக் கனவிலே வெளிப்பட்டுப் பல முறைகளிலும் பலதிருவருட் தன்மைகளைக் காட்டியருளினள்.

ஒரு முறை ஓரிடத்தைக் குறிப்பிட்டு "இவ்விடத்திலே நம்மைத் தாபித்து வழிபட்டுவருவாயாக" என அம்மை அருளிச் செய்தாள். அவர் தமது நிலைமையையெண்ணி அஞ்சி அச் சொப்பனங்களைப் பிறருக்குச் சொல்லாது தமமுள்ளே சிந்தித்து வழிபட்டு வருவவராயினர்.

இங்ஙனமான 1896 விளம்பி வருடம் சித்திரை மாதப் பௌர்ணமி தினத்தன்றிரவு எம்பெரு

மாட்டி அருள் வள்ளலாகிய பெருமானோடும் பால சுப்பிரமணியரோடும் சோமாஸ்கந்த மூர்த்தத்தைக் காட்டிச் சொப்பனத்திலே வெளிப்பட்டு "அன்பனே" பல முறைகளிலும் நாம் வெளிப்பட்டு உனக்குச் சொன்னவைகளை நீ உண்மையென்று சிந்தித்தாயில்லை; அதனுண்மையை உனக்கு இப்பொழுது காட்டுவோம்; அதோ தோன்றுகின்ற தென்னைமரத்திலே சில இளநீர் பறித்து வந்து தா?" என்று கூறியருளினர். அன்பருக்கு அது ஒரு முதிர்ந்த, வரண்ட படுமரமாகத் தோன்றியது. அதனையுணர்ந்த[13] அவர் "அதிற் குரும்பைகள் இல்லையே! யான் உமக்கு எப்படி இளநீர் தரக்கூடும்" என்ன; "நன்று நீ சென்று சமீபத்திலேபார், வேண்டிய குலைகள் தோன்று"மென அம்மையார் அருளினர். அங்ஙனமே அவர் சென்று பார்த்துத், தொங்கும் இளநீர்க் குலைகளைக்கண்டு வியப்பும் அச்சமுங் கொண்டவராய்ச் சில குரும்பைகளைப் பறித்துக் கொணர்ந்து கொடுத்தார். அம்மூவரும் அதிதாகமுடையார் போலப் பருகினா. பின்னர் அவரை நோக்கி "அன்பனே! இந்த இடத்தைத் தோண்டிப் பார், இங்கு ஒரு சிலை தோன்றும்; அதனையே மூலமாக வைத்து ஒரு கொட்டகை யமைத்து வழிபடுவாயாக; சில காலத்துள் பல திசைகளிலுமிருந்து அடியார்கள் வந்து வழிபட்டு இட்டசித்திகளையெல்லாம் அடைவார்கள், வேண்டிய திரவியங்களையெல்லாம காணிக்கையாக இடுவார்கள் அவற்றைக் கொண்டு திருப்பணிகளைச் செய்யத் தொடங்குக; அது பூர்த்தியாகும் வண்ணம் அருள் செய்வோம்; நமக்கு வழிபாடு அன்பின் பூசையேயாகும்; மேலும், உனது மனம் புனிதமுறும் வண்ணம் ஒரு மந்திரமும் உபதேசஞ் செய்வோம்" எனவருளி, மந்திரோபதேசமும் புரிந்து மறைந்தருளினர்.

## சிலை தோன்றுதல்

எம் பெருமாட்டியின் பெருங் கருணையை நினைந்து நினைந்துருகிய அவ்வன்பா மடியவர் உரோமாஞ்சங் கொள்ளக் கண்களினின்றும் ஆனந்த வருவி மல்க, உண்மையையறியும்படி, குறிப்பிட்ட இடத்தை மறுநாள் அகழ்ந்து பார்த்தார். ஆங்கு ஒரு விம்ப வடிவமைந்த சிலை காணப்பட்டது. அதனைக் கண்டு பரவசப்பட்டவராய் அடியற்ற மரம் போல விழுந்து எழுந்து, விம்மி, ஆனந்த பாஷ்பஞ் சொரிய அஞ்சலி புரிந்து அம் மெய்யன்பரானவர்; "இனி எல்லாம் ஈஸ்வரியின் செயலால் இனிதாகும்" என்னும் நம்பிக்கையுடனே ஒருமண்டபம் அமைத்தார். (1896) ஆடிமாதம் திங்கட்கிழமையும் அமாவாசையுங் கூடிய புண்ணிய தினத்திலே பூசை நடப்பிக்கத் தொடங்கிக் காலந் தவறாது பக்தி சிரத்தையோடும் நடப்பித்து வந்தார். தேவி அருளியதிருவாக்கின்படி நாலு திசைகளினின்றும் அடியார்கள் கூட்டங் கூட்டமாகத் திரண்டுவந்தனர். நாகபூஷணியம்மையை வழிபட்டனர். வேண்டிய வரங்களையெல்லாம் வேண்டியவாறே பெற்றனர்.

குட்டம், காசம், ஈளை முதலான கன்மநோய்களினால் வருந்தினோர் இத்

தலத்தை யடைந்து தேவியை வழிபட்டுத் தீராத தம்நோய்கள் தீரப்பெற்றனர். நாக சாபத்தினாலே நீண்ட காலம் பிள்ளைப் பேறில்லாதவர்கள் எம்பெருமாட்டி எழுந்தருளியிருக்கும் இத்தலத்தையடைந்து வந்தனை வழிபாடுகள் புரிந்து பிள்ளைச் செல்வம் பெற்று உய்தி யடைந்தனர்.

அம்பாளின் அதிசயமான அருட் செயல்கள் பற்றிப் பல கர்ண பரம்பரையான கதைகள் காலங் கண்ட முதியோர்களினாலே கூறம்படுகின்றன.

## சீரணி, நயினை நாகபூஷணி

சக்திபீடங்கள் அறுபத்து நான்கனுள் நயினாதீவுத் திருப்பதி யொன்றே இலங்கையில் விளங்குகின்றது. சரித்திரகாலத்திற்கு முன்னதாகவே பல்வேறு சிறப்புப்பெயர்களால் இத்தலம் அழைக்கப்பட்டு வந்தது.

நயினார்தீவு, நயினாதீவு, நாகநயினார்தீவு, நாகத்தீவு, மணிநாக தீவு, நாகதீபம், மணிபல்லவத்தீவு, நாகதிவயின முதலான பல திருநாமங்களால் இத்தலம் அழைக்கப்படும்.

புராதனப் பெருமைவாய்ந்த நயினாதீவில் நாகபூஷணியம்மை யாலயங்களேயன்றிக் காளிகோயில், ஐயனார் கோயில், பிடாரிகோயில், முருகமூர்த்தி கோயில் முதலான பல கோயில்களும் இருந்தனவாகக் கூறப்படுகின்றன.

சீரணித் திருப்பதியிலும் நாகபூஷணியம்மையாலயத்தின் பகுதிகளிலே ஐயனார்கோயில், காளிகோயில் முதலான ஆலயங்கள் இன்னும் விளங்குகின்றமை குறிப்பிடக் கூடியது.

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர்வீதியில் சண்டிருப்பாய்–சீரணிச் சந்தியிலிருந்து சுமார் 50 யார் தூரத்திலே அமைந்துள்ளது. பண்டைத்தமிழ் நூல்களிற் சொல்லப்பட்ட நால்வகை நிலங்களிலும் இத்திருப்பதி வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதநிலப் பண்பு வாய்ந்ததாகும்.

பூலோக கற்பகதரு வெனப்படும் பனை, தென்னை, கமுகு, மா, பலா, வாழை முதலான கனிதரு மரங்கள் பூத்துக் காய்த்து விளங்கும் அழகு பார்க்கப் பார்க்கப் பரவச மூட்டும். பொன்மலை போன்று ஆங்காங்கு விளங்கும் வைகோற்போர்கள் அழகுக்கு அழகுசெய்து நிற்கும். அழகான வீடுகள், மாடமாளிகைகள், "சிறுகக் கட்டிப்பெருகவாழ்" என ஔவைப் பிராட்டி சொல்லிவைத்த இலக்கணத்தின் வரம்புளமைந்து அழகு சொட்டுஞ் சிறு மனைகள் சூழ்ந்து விளங்கும் இத்திருப்பதியிலே பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து நடத்துகின்ற அகிலாண்டேசுவரியாகிய பராசத்தி பரம்பொருளின் வேறானதன்று என்பது போன்று என்றும் நின்று அருள் புரிகின்றாள்.

"அருளது சத்தியாகும்
அரன்தனக் கருளை யின்றித்
தெருள் சிவம் இல்லை யந்தச்
சிவம் இன்றிச் சத்தியில்லை"



தேருருவாக்கிய திருக்கூட்டத்தினரும் ஸ்தபதியார் திரு. கா. சண்முகமும்

"சத்தியும் சிவமுமாய தன்மை யிவ்வுலகமெல்லாம்" என்பது சிவ ஞானசித்தியார்.

## இக்கால நிலை

சண்டிருப்பாய் – சீரணி நாகபூஷணி அம்மன் தேவத்தானத்தின் திருப்பணிவிடைகளை நடத்தும் பொருட்டு 10-10-62–இல் திருப்பணிச் சபையொன்று தாபிக்கப்பட்டது. இச்சபையின் நிருவாக சபையினர் கட்டுடை, சண்டிருப்பாய் – அளவெட்டி, சங்கானை முதலான பல இடங்களிலும் நிதி திரட்டிச் சிறந்த முறையில் அம்பாளின் அருளினாலே மேலான தொண்டுகளைச் செய்து வருகின்றனர்.

மகாமண்டபம், யாகசாலை, கொட்டகை, வசந்த மண்டபம், கொடித்தம்பம் முதலான பழுதடைந்து சிலசிலமடைந்தவற்றை யெல்லாம் புதுப்பித்துத் திருத்தியமைத்துள்ளனர். கோபுரத்தூண்களி னிருமருங்கிலும் அம்பாளுடைய அபிநய ஓவியங்கள் வரையப்பட்டு விளங்கும் அற்புதமான காட்சிகள் உள்ளத்தை யீர்க்குந்தன்மையன.

உள்வீதியில் கலியுகவரதனை முருகப்பெருமான் பிரதிட்டை செய்யப் பட்டுள்ளார்.

பிரபல செல்வந்தரும் மலாயன இளைப்பாறிய அரசகரும சேவையாளரும், கொடைவள்ளலுமாகிய திரு. கா. தம்பையா அவர்களின் உள்ளத்தினுள்ளே ஊறிய வள்ளற் தன்மையினாலும், அம்பாளின் அருளினாலும் தொடங்கிய தேர்த்திருப்பணி, அன்னாரின் அகாலமரணத்தினாலே சிறிது தடைப்பட்டுப், பின்னர் அவரின் தருமபத்தினியாகிய வள்ளியம்மையினாலே சுமார் இலட்சம் ரூபாய் செலவில் ஆக்கப்பட்டு விளங்கும் அழகுபொழியுஞ் சித்திரத்தேர்; விழாககாலங்களில் மேலான சிறப்பைக் கொடுக்கும் பொருட்டாக ஆக்கப்பட்டுள்ளது. பல ஆயிரககணக்கான ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தேரோடும் வீதி ஆலயத்திற்கு மேலும் அழகுசெய்து நிற்கின்றது.

## நித்திய நைமித்திகங்கள்

ஆறுகால நித்திய பூசைகள கிரமமாக நடைபெற்று வருகின்றன. ஆண்டுதோறும் சித்திரை மாதத்திலே மகோற்சவம் நடைபெறும். சித்திரா பூரணையிலன்று தேர்த்திருவிழா நடைபெறும்.

புரட்டாதி மாதத்திலே நவராத்திரி விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனைகள், சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்று அருளொளியும் அறிவொளியும் பிரகாசிக்கின்றன.

## பாதுகாவலர்

இத் தேவத்தானத்தின் ஆரம்ப காலத்தில் சண்முகம் முருகேசு என்பவரே பாதுகாவலராகவும் பூசகராகவும் விளங்கினர். அவரின் பின்னர் அவருடைய தமையனர் வைத்திலிங்

கம் ஆலயப் பாதுகாவலராக விளங்கினர். பின்னர் அவரின் மகன் திரு. வை. நடராசா பாதுகாவலராகவும், பூசகராகவும் விளங்கினர். திரு. வை. நடராசாவின் பின்னர் மாமனர் திரு. அ. கதிரவேலு என்பவர் பாதுகாவலராகச் சிறிதுகாலமிருந்து நடாத்தி வந்தார். தற்பொழுது, நீண்டகாலமாக அஞ்ஞாத வாசமாயிருந்து அம்பாளின் அருளினற் குறித்த வைத்திலிங்கத்தின் இளையமகன் கந்தையாவெனப்படும் கௌரிபாலா சுவாமியார் ஆலயத்தின் பரிபாலனத்தைச் சிறப்பாக நடாத்தி வருகின்ருர். அவர்,

> "நங் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
> தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
> தன் கடன்னடி யேனையுந் தாங்குதல்
> என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும்

அப்பர் பெருமான் திருவாக்குக்கு ஒப்பாக அம்பாளின் பரிபாலனத்தைச் செவ்வனே நடாத்தி வருகின்ருர்.

---

சீரணி திகழ்திருமார்பில் வெண்ணூலர்
திரிபுரமெரி செய்த செல்வர்
வாரணி வனமுலை மங்கையோர் பங்கர்
மான்மறி யேந்திய மைந்தர்
காரணி மணிதிகழ் மிடறுடை யண்ணல்
கண்ணுதல் விண்ணவ ரேத்தும்
பாரணி திகழ்தரு நான்மறையாளர்
பாம்புர நன்னக ராரே

— 1-ம் திருமுறை

பார்புரந்த திருவடியும் அடியவர்கள் ளீடேறும் படிக்குப் பைம்பொற்
ருர்புரந்த வடிவழகு மழுகெழுமங் கலநாணுந் தயங்குஞ் சோதிக்
கார்புரந்த கருங்குழலும் வெண்ணகையுஞ் செவ்விதழுங் கருணைக் கண்ணுஞ்
சீர்புரந்த பிடியன்ன மென்னடையம் பிகைபாதஞ் சிந்தை செய்வாம்.

— தக்ஷிண கைலாச புராணம்

# தேரின் தத்துவம்

தேர்கள் பல்வேறு வகைப்பட்டனவாக விளங்குகின்றன. எனினும் அவற்றின் வடிவமைப்பில் வேற்றுமை இல்லை. மரத்தேர், வெள்ளித்தேர், தங்கத்தேர் எனப்பலதேர்கள் உள்ளன.

தேர்கள் பெரும்பாலும் தாமரைப்பூவடிவிலே அமைக்கப்பட்டனவென்பது பண்டைத்தமிழ் நூல்களினல் அறியக்கிடக்கின்றது.

'கோட்டிற் செய்த கொடிஞ்சி நெடுந்தேர்,'
— பொருநராற்றுப்படை

"நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி நின்றோன்"
— அகநானூறு 110

கொடிஞ்சி என்பது தாமரைப்பூ வடிவமாகவோ, முகை வடிவாகவோ அமைந்து விளங்குவதென்பது கருத்தாகும்.

"அண்டத்திலுள்ளது பிண்டத்திலும்" என்பர். தேரின் அமைப்பு அண்ட பிண்டத்திற்குச் சமானம். விசுவ விராட் சொருபமே எட்டடுக்குகளாகும்.

தேரிலே விளங்கும் உச்சிக்குடை பிரமரந்திரம் எனப்படும். உச்சிக்கலமம் சோடசாந்தத்தானம். முதலாம் அடுக்கு துவாத சாந்தத்தானம். இரண்டாம் அடுக்கு மஸ்தக ஆகிஸ்தானம். மூன்றாம் அடுக்கு மஸ்தக மத்தியஸ்தானம். நான்காம் அடுக்கு மஸ்தக அந்தத்தானம் எனப்படும். ஐந்தாம் அடுக்கு லலாட மததியத்தானம். ஆறும் அடுக்கு புருவமத்தியத்தானம் எனப்படும், ஏழாம் அடுக்கு; நடுவே தாங்கும் 32 குத்துக்கால்கள், இவை தத்துவக்கால்கள் எனப்படும். முன் மூன்று துறைகள் மூன்று கண்களெனவும், பின் துறைகள் சிகைகளெனவும், இட, வலத்துறைகள், காதுகள் எனவும்படும். இறைவன் எழுந்தருளியிருக்கும் கேடயபீடம் முப்பாழ்; குதிரைகள் சூரியசந்திர கலைகள், சாரதி அக்கினிகலையெனவும் படும். எட்டாம் அடுக்குக் கண்டத்தானம்' ஒன்பதாம் அடுக்கு இருதயத் தானம் பத்தாம் அடுக்கு நாபித்தானம், பதினொராம் அடுக்கு குண்டலீத் தானம் எனப்படும். பத்துச் சக்கரங்கள் தசவாயுக்கள் எனப்படும்.

இறைவன் தான் ஒருவனே உலகத்துக்குக் கருத்தா என்றுணர்த்தி; இவ்வாறமைந்த பிண்டதத்துவ சரீரமாகிய இரதத்திலே தசவாயுக்களாகிய சக்கரங்களினிறுத்தி, அசைவற்ற மனத்தை உந்தி, குண்டலியிலிருந்து நாபிக்கும், அங்கிருந்து கண்டத்திற்கும், அங்கிருந்து வாய்க்கும் ஏற்றி,

லயப்படுத்தி முறையே இரதக் குதிரையாம் நாசிக்கும், அங்கிருந்து இருகண்வழியாகவும், நடுவழியாகவும் மேல்நோக்கி, ஆறாம் அடுக்காகிய புருவமத்தியிற் செலுத்தி, லலாடம் முதல் துவாதசாந்தம் வரை ஏற்றி லயப்படுத்திச் சும்மாவிருந்தபடி இருக்கும் நித்திய சுகியாய் இருந்திடல் வேண்டுமென்ற லயக்கிரமத்தைக் காட்டுகின்றது.


அன்றியும் இது புராணவாயிலாகத் திரிபுரசங்காரத்தையும் குறிக்கும்.

சதாவதானம் திரு. நா. கதிரவேற்பிள்ளையவர்கள் தேரைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்கள்.

"இன்னும் தேர்வடிவம் சரீரமாகவும், அதிற்காணப்படும் நான்குசிங்க வடிவங்கள், ஆன்மாவின் சர்வவித சிவகாருணியமில்லா லோபகுரூரம்; சர்வவித ஆசைப்பெருக்க சங்கற்ப விருத்தி; சர்வவித அபிமான கோலாகல விபரீதம்; சர்வவித அகங்கார கோபதாபவிகாரம் என்னும் இந் நான்குவித கர்ம விருத்திகளாகவும்; எட்டுயாளி உருவங்கள், ஆன்மாவினது அஞ்ஞானம், அபிமானம், ராகாதிகுணம், துக்கம், விடயவாசனை, நானாவித கன்மம், உபாதி, அவஸ்தை என்னும் எட்டுவித அநுபவங்களாகவும், கொடிகளெல்லாம் தத்துவக் கூட்டங்களாகவும், மணிகளெல்லாம் பீசமந்திர பிரணவாதி சத்தங்களாகவும், குஞ்சங்கள் எல்லாஞ் சீவர்கள் மனோசலனத்தால் எண்பத்து நான்கு லக்கயோனி பேதங்களாக மாறிமாறித் தோன்றியடையும் மாறுவத்தையாகவுங் கொண்டு, சீவர்கள் சிங்கங்களையொத்த கர்மவிருத்திகளையும், யாளிகளைப் போன்ற அநுபவங்களையும், கொடிகளைப் போன்ற தத்துவக் குழாங்களையும், மணிகளைப்போன்ற லாக்கொலிகளையும், குஞ்சங்களைப் போன்றமனசலனதோற்றங்களையும், இல்லையென்னும்படிசெய்து, சித்திரதீபம் போல நின்று மோன சாட்சாத்கார கோலநிலையில் நிற்கவேண்டும் என்பதும், இந்த லயக்கிரம திதிக்கோலத்தால் அறிவார் நுண்ணுணர்வோர்."



பரமகுரு - கந்தையா - சுவாமியார் கௌரிபாலா



[illegible]

# பரமகுரு - கந்தையா
# சுவாமியார் கௌரிபாலா

வளம்மிக்க சண்டிருப்பாயைச் சேர்ந்த சிரணியில், வைத்தியலிங்கத்துக்கும் காமாட்சியம்மைக்கும்,1914-ம் ஆண்டில் தவத்தின்பயனாய் ஆண்மகவொன்று பிறந்தது. தந்தையார் தனயனுக்கு உவந்தளித்த பெயர் பரமகுருவாகும். பின் அவர் கந்தையனார் என்றும் அழைக்கப்பட்டார். 14-ம் வயதில் பரமகுரு, பிறந்த ஊரை விட்டு நீங்கி அனுரதபுரமடைந்தனர். அங்கு அவர் ஏழுநாட்களாக ஆகாரமின்றி இருந்தனர். அக்காலை அநுரதபுரியில் பரமகுருவைக் கண்ட, காரைநகரைச் சேர்ந்த முருகேசு பெண் தங்கம்மா அம்மையார், அவருக்கு உணவளித்துத் தனது மகன் போல் அணைத்துக்கொண்டனர். வீட்டுக்கழைத்துச் சென்று, பிள்ளைப்பேறில்லாத தங்கம்மா அம்மையார் பரமகுருவைத் தான்பெற்ற பிள்ளை போல் மூன்று வருடமாக வளர்த்து வந்தனர். பரமகுரு வளர்ந்துவருங் காலை செம்மனச் செல்வியாகிய தங்கம்மா அம்மையாருக்கு ஒரு குழந்தை பிறந்தது. இக்குழந்தை பிறந்தபின் பரமகுருவை ஒரு தெய்வகுழந்தையாகப் பாராட்டிவந்தார். சிதம்பர நடேசனைத் தரிசிக்க வேண்டுமென்று கருதிப் பரமகுரு, அம்மையாரின் உத்தரவு கேட்டனர். அம்மையார் கொடுத்த ரூபா 200/- உடனும் நல்லாசியுடனும் சிதம்பரம் சென்றனர். நடேசப் பெருமானைத் தரிசித்தப் பின் 1938-ம் ஆண்டு அம்மையாரைத் தரிசிக்க, இலங்கைக்குத் திரும்பினர். அம்மையார் மீண்டும் ரூபா 500/- கொடுத்து யாத்திரை செய்துவருமாறு வேண்டித் தன்னுடைய அந்தியகாலத்தில் தவறாது தன்னை வந்து காண வேண்டுமெனக் கூறினர். இம்முறை இந்தியா, மலாயா, போர்னியோ, பிலிப்பைன் ஆகிய நாடுகளெல்லாம் திரிந்தனர். ஈற்றில் திருவண்ணாமலை ரமண ஆச்சிரமத்தில் தங்கித் துறவு பூண்டனர். பின்பு இவரின் குருநாதராகிய கடப்பை சச்சிதானந்த யோகீஸ்வரர், இவருக்குக் கௌரிபாலா என்னும் திருநாமத்தை அளித்தனர். அப்பொழுது கௌரிபாலா, குருதேவரைப் பணிந்து, எனது கடமை என்ன? என்று கேட்டனர். உலகிற்குப் பணி செய்வதே உன் கடமை. பலனை எதிர்பாராதே! எனக் குருநாதர் கூறினர். குருநாதரின் உபதேசத்தை மேற்கொண்டு கௌரிபாலாச் சாமியார் இலங்கைக்கு 1951-ல் திரும்பினர். இலங்கையில் கதிர்காமம், திருக்கேதீச்சரம், முனீச்சரம், திருக்கோணேச்சரம், முதலிய தலங்களைத் தரிசித்தனர்.

1953-ம் ஆண்டு பளையில், சா[illegible] வல்லிபுரமும் சுவாமியார் கௌரிபா

லாவும் சேர்த்து ஒரு ஆச்சிரமத்தை ஸ்தாபித்தனர். அதன் பெயர் பழனியாண்டவன் ஆச்சிரமம் என்பதாகும். இவ்வாச்சிரமத்தில் சமயபோதனை புண்ணிய கைங்கரியங்கள் பல நடைபெறுகின்றன.

சுவாமியார் கொக்குவிலில் தங்கிய ஞான்று, சிரணி நாகபூஷணி அம்மையார் கனவிற் காட்சியளித்தனர். பாம்பாகக் காட்சியளித்த அம்மையாரைக் கண்ட சுவாமியார், மறுநாள் சிரணிக்குக் கரும்பாம்பொன்று செய்து கொண்டுபோய் ஆலயத்தில் வைத்து வணங்கி வந்தனர். மறுநாள் அம்பாள் காட்சியளித்துப் 'பக்தா! இரும்பினால், கரும்பாம்பு செய்து விளையாட்டுச்செய்தாயோ', என வினவி மறைந்தனள். அடுத்தநாள் அடியார்பலர் சுவாமியிடம்வந்து, சுவாமியாரின் மூதாதையர் பாரம் பரியமாகச் செய்து வந்த ஆலயபரிபாலனத்தை மேற்கொண்டு சிவதொண்டாற்றும்படி வேண்டினர். அன்று தொடக்கம் சுவாமியார் கௌரிபாலாஷை ஆலயபரிபாலனத்தைத் திறம்பட ஆற்றிவருகின்றனர்.

---

கனத்தாள்வெங் கயமுகனுங் கந்தனுஞ் சம்
பந்தனும் பாலுண்ட கும்ப
தனத்தாளே யறம்வளர்த்த கரத்தாளே
திரிபுரங்கள் தழலாய் வேவச்
சினத்தாளே சிறியோர்கள் செய்தபிழை
பொறுத்திரக்கஞ் செய்யுஞ் செய்ய
மனத்தாளே நின்கமல மலர்த்தாளே
யென்றலைமேல் வைத்தாள் வாயே.

அந்தரியா மளையமலை யாலகாலி
யம்பிகைமா தரிகௌரியாளியூர்தி
வந்தரிநான் முகன் வணங்கு மலர்த்தாட்சூரி
வைரவிதா ருகவைரி மாதங்கி நீல
சுந்தரியோ கினிசூலி நீலிநாக
கங்கணிசங் கரிவிமலை காளிவால
சுந்தரி சாமுண்டி திரி சூலிகோலத்
துணையடியென் முடிமீது சூடினேனே.

— புராணம்



திரு. கா. தம்பையா அவர்கள்



[illegible]

# திரு. கா. தம்பையா அவர்கள்

"அறனீனும் இன்பமுமீனுந் திறனறிந்து
தீதின்றி வந்தபொருள்"

"ஊருணிநீர் நிறைந்தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு"

"பயன்மரம்உள்ளூர்ப்பழுத்தற்றாற்செல்வம்
நயனுடை யான்கட் படின்"

வள்ளுவர் சொல்லிய தெள்ளிய வாசகங்கள் இவை. பிறருக்குத் தீமை பயத்தலின்றி வந்த (தேடிய) பொருள் அறத்தையும் தரும், இன்பத்தையும் தரும், என்பது முதலாவதன் பொருளாகும்.

உலக நடையை விரும்பிச் செய்யும் அறிவினை யுடையவனது செல்வமானது ஊரின்வாழ்வார் தண்ணீருண்ணுங்குளம், நீர்நிறைந்தாற்போலப் பலர்க்கும் பயன் படும் என்பதாம். இது இரண்டாவதன் பொருள்.

மூன்றாவது "பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்" என்பது. அஃதாவது; செல்வமானது ஒப்புரவு (உலக நடையையறிந்து) செய்வான் கண்ணே படுமாயின்; அது; பயன்படுகின்ற ஒரு மரம், ஊர்நடுவே பழுத்தாற் போலப் பலர்க்கும் பயன்படும் என்பதாம்.

ஏரியிலே நீர்நிறைவது விவசாயஞ் செய்பவர்களுக்குப் பயன்படுத்தற்காகவே. நிறைந்திருக்கும், நீர் முழுவதும் "எனக்கேதான்" என ஏரி நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் ஏரியிலே தண்ணீர் ஏற, ஏற மடையைத் திறந்து அதனை வெளியேவிடவேண்டியது அவசியம். இல்லையானால், ஏரி தானாகவே உடைத்துக்கொண்டு வெளியே வந்துவிடும். இயற்கையின் சட்டப்பிரமாணங் கூட அப்படித்தான். அதுபோலவே ஏராளமாகப் பணம்படைத்த செல்வனும் தனது செல்வத்தை ஏரியைப்போலவே தாராளமாகத்—தானாகவே—தேசத்தொண்டுக்குத்—தெய்வத் திருப்பணிக்குப்-பொது நல நன்மைக்கு வாரி வாரி வழங்க முன் வருவான்.

முட்டாச் சிறப்பின் கட்டுடைப் பதியிலே வதிந்து "திரைகடலோடியுந் திரவியந் தேடு" எனும் பொன்மொழிக் கொப்ப மலாய்நாடடைந்து உத்தியோகத் தமர்ந்து பெரும்பொருளீட்டி "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என அப்பர் பெருமான் செப்பிய வாக்கைத் தன்கடனாக்கொண்டு மலாக்காவிலே திரௌபதியம்மன் கோயில் கட்டிக் குலவிடச் செய்தகுன்றுவிளக்கு! நயினாதீவிலேநவக்கிரகக் கோயில் நலமுற நாட்டிய நற்பண்பாளன்! சிரணித் திருப்பதி நாகபூஷணியாலய மணிக்கூண்டுக் கோபுரம் அணிபெறச் செய்த நற்றவசீலன்! சங்கானைப்பதியொளிர் சங்கரன் கோயில் அசையாமணி ஆக்கியுதவிய தங்கத் தவத்தினன்! சண்டி

ருப்பாய் கல்வலை விநாயகப் பெருமானின் கருப்பக் கிரக மண்டபங் கட்டியெழுப்பிய தருமசீலன்! மூளாய் ஐக்கிய ஆங்கில வைத்தியசாலை ஆக்குதற் பொருட்டுப் பெரும்பணமீந்த மாபெரும் வள்ளல்! மானிப்பாய் இந்துக்கல்லூரி மங்கையர் கழகம் மாண்புற மாநிதி வழங்கிய காமதேனு! சண்டிருப்பாய் ஐயனார்கோவிலில் நாகப் பிரதிட்டை பண்ணுவித்து வைத்த புண்ணியசீலன்! நல்லூர்க் கந்தன் திருவிழாச் செய்த செல்வச் சீமான்! சீரணி நாகபூஷணியம்மைக்குத் திருத்தேர் செய்யத் திருவுளங் கொண்ட திருவுடையானன்! பவத்தொண்டாய அவத்தொண்டகற்றித் தவத்தொண்டாய சிவத்தொண்டிற் றிளைத்த சீரியன்!

மலாக்காத்தம்பையா, குன்றுவிளக்கு நற்பண்பாளன்! நற்றவசீலன்! தங்கத்தவத்தினன்! தருமசீலன்! மாபெரும் வள்ளல்! காமதேனு! புண்ணியசீலன்! செல்வச் சீமான்! அறம் வளர்த்த அண்ணல்!!

வாழ்க அவன் புகழ்.

---

ஈன்றாளுமாயெனக் கெந்தையுமாய்
உடன் தோன்றினராய்
மூன்று யுலகம் படைத்துகந்தான்
மனத்துள் ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன்
திருப்பாதிரிப் புலியூர்த்
தோன்றாத் துணையாயிருந்தனன்
தன்னடியோங் களுக்கே

— அப்பர் சுவாமிகள்





## திரு. நா.ச. கந்தையா அவர்கள்

சிவதொண்டே தன்பணி யெனக் கொண்டு உடல், பொருள், ஆவி அனைத்தும் அர்ப்பணிக்கும் அன்பன் கந்தையா அவர்கள், தேர்த்திருப்பணி பூரணத்துவமுறச் ஸ்ரீமதி வள்ளியம்மைக்கு உறுதுணையாய் நின்று உழைத்த உத்தமன். திரு. தம்பையாவின் மைத்துனன்.

# கொடுங்கோல் களைந்து —
# கோயில் கொண்டருளிய தெய்வம்

**வட்டுக்கோட்டை - வயிரமுத்து**

*சக்திவழிபாடும் கண்ணகியும்:*

மேன்மைகொள் கண்ணகி வழிபாடு, தொன்மைமிக்க சக்திவழிபாட்டின் பாற்பட்டதாகும். சக்திவழிபாட்டிற்குரிய தனிச்சமயத்தைச் சாக்தமென அழைப்பர். தமிழன் பழம் பெருமைப் புதையல் மிகுந்த சிந்து நதிப் பள்ளத்தாக்கில் தேவியின் சிலைகளை அகழ்ந்தெடுத்த வரலாற்றறிஞர் தேவி வணக்கம் ஆரியர் காலத்துக்கு முந்தியகால மெனத் துணிந்து அறுதியிட்டுக் கூறுவர். சக்திவழிபாடு காலவரையறைக்கு அப்பாற் பட்டதாய், தனித்தும் சிவனோடு சேர்த்தும் வழக்கிலிருந்ததாகும். தனியாகச் சக்தியைக் கூறும் ஞான்று துர்க்கையென்னும் கானில் வாழ் தெய்வமாகவும், அழகுற வர்ணிக்கப் படுவதைப்பழந்தமிழ் ஏடுகளிற் காணலாம். "கானமர் செல்வி அருளல்" என்றுவரும் அகநானூற்று அடியை நோக்குக. சிவனோடு சேர்த்துச் சக்தியை வணங்கியவழக்கை "ஈர்ஞ் சடை அந்தணன் உமை அமர்ந்துயர் மலை இருந்தனன்" எனவரும் கலித்தொகை அடியாலும், பிடியனநடையாள் பெய்வளைமடந்தை பிறைநுதல் அவளொடும், எனவரும் திருக்கோணமலைத் தேவார அடியாலும் காண்கின்றோம்.

கண்ணகிவழிபாடு சுமார் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்குமுன்னர் ஆரம்பமாயிற்று. செருக்கழித்து, அறம்வளர்க்க, உளங்கனிந்தருளும் கண்ணகிக்குக் கோட்டம் எழுப்பி மக்கள் வணங்கி வரலாயினர். தமிழ் நாட்டிலும் பிறநாட்டிலும் கண்ணகி வழிபாடு செறிந்து மிளிர்வதைத் தலை நிமிர்ந்துநிற்கும் கண்ணகிக்கோட்டங்கள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள தேவியின் கோட்டங்களின் பெயர்கள் திரிந்து அல்லது குறைந்து அம்மன் ஆலயங்களெனப் பெயர் பெற்று நிற்பதை அவ்வவ் வாலயங்களின் வரலாறுகள் விரித்துரைக்கும்.

(i வற்றாப்பளை கண்ணகி அம்மன்— வற்றாப்பளை அம்மன், ii வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் – வட்டுக் கோட்டை மாதாங்கோவில் – வட்டுக் கோட்டை (கண்ணகாலிங்கேஸ்வரர்.

iii கண்ணகி அம்மன் – அம்மன்) யாழ்ப்பாணத்தில் அம்மன் கோவில்களென்று அழைக்கப்படுபவை அநேகமாகக் கண்ணகி கோட்டங்களாகவே இருக்கவேண்டும். பௌத்தம் தழுவிய சிங்களப் பிரதேசத்திலும் கண்ணகி கோட்டங்கள் காணப்படும். கண்ணகத் தெய்யோ' வென சிங்களரும் கண்ணகியை வழிபட்டு அருள் பெறுவர். ஈழத்துத் தென்திசையில் தெய்வந்துறை யென்னும் திருப்பதியுண்டு. தெய்வந்துறையை தேவிநுவரையுமென அழைப்பர். பத்தினி தேவி வணங்கப்பட்ட திருப்பதி யென்பதே தேவிநுவரை யெனபதின் பொருளாகும். ஈழத்தின் வடபகுதி தொடக்கம் தெனபகுதிவரை கண்ணகி வழிபாடு மிகுந்திருந்ததாகும்.

### வெடியரசன் தருக்கழித்த கண்ணகியின் வேல்:

"தண்ணீருங்காவிரியே தார்வேந்தன் சோழனே மண்ணாவதுஞ் சோழ மண்டலமே" என்று செநதமிழ்ச் செல்வியார் பயந்துரைத்த சோணாட்டில் மாநாகன் மகளாய் கண்ணகியார் ஒற்றைப்பாதச் சிலம்புடன் அவதரித்தார். மணவினைப்பருவம் எய்தியஞான்று இரண்டாவது சிலம்பு செய்யக கருதிய மாநாகன், நாகரத்தினம்வேண்டிச் சோழ மன்னன் உதவியை நாடினன். எண்ணிலாப்படையுடன் கடற்படைத் தளபதி மீகாமனை, நாகதீபம் அல்லது மணிபல்லவம் என அழைக்கப்பெறும் நெடுந்தீவுமன்னனை வெடியரசப் பூபதியிடம் நாகரத்தினம் பெற்று வருமாறு சோழ மன்னன் பணித்தனன். அக்கால நாகவழிபாடுடைய தமிழர்–நாகசாதியார், ஈழத்தின் வடபகுதியிலும், அதையொட்டிய தீவுகளிலும் அரசியற்றி வந்தனர். அவர் தம்புகழ் பாரதநாட்டிலும் பரந்திருந்தது. ஆகவே மீகாமன் வெடியரசனைப் பற்றியும், அவன் சகோதரரான புங்குடுதீவையாண்ட வீரநாராயணன் நயினாதீவையாண்ட விளங்குதேவன், வேலணையையண்ட ஏரிலங்குரவன், என்பவரைப் பற்றியும் ஏற்கனவே அறிந்திருந்தான்.

கொந்தலர் மாலைக் குக வெடியரசனுக்
கைந்தலை நாக மருகினிற் காவல்
செந்தழ லரக்கர் சேனைகள் காவலன்
வந்திடுபலபடை வயங்கிடு மரசுமு
உந்திடு முன்றனுக் குரைக் குகந்தேகிட
என்மன வெண்ண மிசையு மோவரசே.
(வெடியரசன் நாடகம்)

இவ்விதம் கூறியபோதும், மனத்தைத்தேற்றிக் கடற்படையுடன் சென்று நெடுந்தீவுக்கரையில் வெடியரச பூபதியுடன் நாகரத்தினத்துக்காக மீகாமன் பொருதினன். இக் கடற்போரை பேனாட்டுவரலாற்றறிஞரும் பகர்வர். வெடியரசன் வெந்திறலுக்கு ஆற்றாது புறமுதுகுகொடுத்தோடிய மீகாமன் சோணாடு சென்று கண்ணகியிடம் முறையிட்டான். கண்ணகிதிருவருள் கூர்ந்து மாற்றார் வலியறுக்க வல்ல வேற்படையொன்று நல்கிக் கீழ்வருமாறு திருவாய் மலர்ந்தருளினர்.

வற்றிடா வாவிசூழும் மாநிலத்தரசன் சேனை
சுற்றியேவளையுமுன்னைச் சுடர்நெடுவேல்தேவிப்
பற்றுமையிரண்டுக்கொன்றுபடும்வகைகொடுத்
துத்து நீயும்
வெற்றியாய் வருவாயென்று மிகுவரம் விளம்பி
னேனே.

நெடுந்தீவுக்கு மீண்ட மீகாமன் தேவியின் திருவருளால் விறல்மிகு வெடியரசன் சருக்கை அழித்து, கண்ணகா தேவிக்கு நாகரத்தினம் கொண்டு சென்றனன்.

*நெடுஞ்செழியன் கொடுங்கோல் கெடுதல்:*

வஞ்சனை மிகுந்த நெஞ்சத்துப் பொற்கொல்லன் ஒருவனின் சூழ்ச்சியால், கோவலன் தான் விற்பதற்குக் கொணர்ந்த கண்ணகியின் சிலம்பினை அவனிடம் காட்டினன். பாண்டிமாதேவின் சிலம்பைக் கவர்ந்த பொற்கொல்லன், ஒன்றுமறியாக் கோவலன்மேல் பழிசுமத்துவான் கருதி, பாண்டிய மன்னனிடம் சென்று, 'அரண்மனையிலிருந்த சிலம்பினைத் திருடிய கள்வன் அச்சிலம்புடன் அடியேன் சிறு குடிலில் வந்தனன்' என உரைத்தனன். முற்றும் ஆராய்ந்து தீர்ப்புக் கூறத் தவறிய பாண்டிய மன்னன், அவனைக் கொன்று அச்சிலம்பினைக் கொணர்வீர் எனக் காவலாளர்க்குப் பணித்தனன்.

> "இலக்கண முறைமையின் இருந்தோன் ஈங்கிவன் கோவலப்படு மகனலன்"

என்று கூறும் காவலாளரையும் ஏமாற்றிய கருந்தொழிற்கொல்லன், கோவலனை வெட்டுமாறு துரிதப் படுத்தினன். வன்னெஞ்சப் பாதகக்காவலனொருவன் வாள் கொண்டு கோவலன் தலையைத் துணித்தனன். பழுதிலா நெஞ்சத்துக் கோவலன்,

> "காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்"

மாசிலாப் பாண்டிய மன்னர் மரபில் என்றும் வளையாத செங்கோல் பாண்டியன் நெடுஞ்செழியனால் வளைந்ததே! கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட கண்ணகி காளியாகவே மாறிவிடுகிறாள். பாண்டியன் பேரவை சென்று, மன்னன் ஆற்றிய அநீதியை அஞ்சாது எடுத்து இயம்பினள். கண்ணகி தன் சிலம்பினையுடைத்து, அது பாண்டியன் சிலம்பல்ல வென்றதைக் காட்டினள். கண்ணகியின் உடம்பிற்படிந்த புழுதியையும், விரிக்கப்பட்ட கரிய கூந்தலையும், கையிலுள்ள ஒற்றைச் சிலம்பினையும் கண்ணீரையும் பாண்டிநாட்டுக்கிறைவனாகிய பாண்டியன் பார்த்தவளவிலே தோற்றேனென்றும், அந்நங்கையின் சொல்லினைச் செவியில் உட்கொண்டவளவிலே உயிரை இழந்தான் என்றும் இளங்கோவடிகள் கூறுவதைக் காண்க.

> "மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
> கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் – வையக்கோன்
> கண்டளவே தோற்றான்அக்காரிகை தன் சொற்செவியில்
> உண்டளவே தோற்றான் உயிர்"

பாண்டியன் நெடுஞ்செழியன் அரியணையிலிருந்து வீழ்ந்து இறந்தனன். பாண்டிமாதேவியும் அது கண்டு உயிர் நீத்தனள்.

*கண்ணகி வழிபாடு:*

கொடுங்கோல்குலைத்தும் கோபமாறாக் கண்ணகித் தெய்வம், மதுரை வாழ் தீயோரை எரிக்கு இரையாகச் செய்து, பதினன்காம்நாள் விமானம்

ஏறி தேவருலகடைந்தனர். கண்ணகித் தெய்வத்தின் சீருடைவரலாற்றை உணர்ந்த சேரன் செங்குட்டுவன் கண்ணகித் தெய்வத்துக்குக் கோயில் எழுப்ப எண்ணினன். இமயஞ் சென்று தமிழரை இழித்துரைத்த ஆரியமன்னரான கனகவிசயர் தலைமேல் கண்ணகிக்கு உருச் செய்யும் சிலையினை, அவர்தலைமேல் ஏற்றி, கங்கைப்பெருநதியில் நீராட்டி வஞ்சி சேர்ந்தனன். கண்ணகித் தெய்வத்துக்கு திருக்கோவில் எழுப்பி இமயத்திலிருந்து கொணர்ந்த கல்லில் இயற்றப்பட்ட சிலையைப் பிரதிட்டை செய்து வணங்கினன். நாடுவணங்கியது. கண்ணகி வழிபாடு பரவியது. பாண்டிநாட்டில் பஞ்சம் புகுந்து நாடு நலிந்தது. கொற்கை வெற்றிவேற் செழியன் கண்ணகிக்குக் கோயிலமைத்து விழாக் கொண்டாடி நாடு செழிக்கச் செய்தான். கொங்குமண்டலத்தரசரும், கடல்சூழ் இலங்கைக் கயவாகுவும், சோழன் பெருங்கிள்ளியும் பத்தினிகோட்டங்கள் அமைத்து விழாவெடுத்து அருள்பெற்றனர். செங்கோலுக்கும் நாட்டுவளப்பத்துக்கும் அரசரும் குடிமக்களும் ஆடித்திங்களில் கண்ணகித் தெய்வத்துக்கு விழாவெடுத்துத் திருவருள் பெறுவர்.

---

# திரு. கா. சண்முகம் ஆசாரியார்

அராலியைச்சேர்ந்த இவர் அரியாலைச் சித்திவிநாயகர், அராலிதெற்கு அம்மன், [மாதா] புங்குடுதீவு பெருங்காட்டு அம்மன், பிராம்பத்தை முருகமூர்த்தி, கொட்டைக்காடு ஞானியார் கோயில் முதலானவற்றின் தேர்கள் செய்தவர்.

பரம்பரையாகவே வந்த வித்தை. தமிழ்நாட்டில் மட்டுமன்றி, நம்நாட்டிலும் சிற்பவல்லுநர் இருக்கின்றார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர். அராலி கிழக்கைச் சேர்ந்தவர், யாழ்ப்பாணத்துக்கும் ஈழநாட்டுக்கும் புகழ் ஈட்டியுள்ளார்.

---

ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

ஓர் அற்புதமான ஔஷதம்

“ராதா”

# மின்சார மருந்து

மண்டையிடி, ஒற்றைத் தலைவலி, ஜலதோஷம், மூக்கடைப்பு, கைகால் முழங்கால் வேதனை, இடுப்புவலி, வெட்டுக் காயங்கள், தீப்பட்டு வெந்தபுண்கள், காதுவலி, காதில் சீழ் வடிதல, பீனிசம், கண்வலி, கண்வீக்கம், கண்கட்டி, பல்வலி, பல் அரணை, அடி பட்ட வீக்கம், தாங்கமுடியாதவலி, அஜீரணம், சீதபேதி, வயிற்றுக்கடுப்பு, உஷ்ணபேதி வயிற்றுப்பொருமல், வாய்வு இன்னும் அநேக நோய்களுக்குச் சிறந்தது.

**ஒருபுட்டி ராதா மின்சார மருந்து**

கைவசமிருந்தால் ஒரு டாக்டர் வீட்டில் இருப்பதுபோல உதவி கொடுக்கும்.

இலங்கையின் ஏக வினியோகஸ்தர்கள்.

## எஸ், சுப்பிரமணியம் அன் கோ.

53, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்

160, செட்டியார்தெரு, கொழும்பு 11

---

## சேகரம் அன் சன்ஸ்

*74, ஆஸ்பத்திரி வீதி ★ யாழ்ப்பாணம்*



நம்பிக்கையான

**நைலோன் குறலோன் வலைகள், நூல்கள்**

இறக்குமதியாளர்கள்.

## SEGARAM & SONS

IMPORTERS OF NYLON & KURALON FISHING NETS & TWINES ETC.

HOSPITAL ROAD : : JAFFNA

உள்நாட்டுப் பத்திரிகைகளா?
லேக் ஹவுஸ் பத்திரிகைகளா?
தமிழ், ஆங்கில, சிங்கள
மாதாந்த - வாராந்த சஞ்சிகைகளா?
தினக்குறிப்பு - கலண்டர்களா?
பொது அறிவு நூல்கள் பாட
சாலைப் புத்தகங்களா?
எதுவானாலும் உங்களை
அன்புடன் அழைக்கின்றோம்.
இந்திய, சீன, றஷ்ஷிய சஞ்சிகை
களுக்கும் வட.மாகாண
ஏக விநியோகஸ்தர்,
மக்கள்பரிப்பக நூல்களின்
ஏக விநியோகஸ்தர்கள்.
சந்தாதாரராகச் சேர இன்றே
மனுச்செய்க.

## பூபாலசிங்கம்
### புத்தகசாலை

57, பழைய பஸ் ஸ்ராண்டுக்கு முன்
27, பசார்வீதி, யாழ்ப்பாணம்

---

## SHANMUGAM STORES

DISTRIPUTORS
**WINGET PUMPS**
222, Hospital Road, Jaffna.

உங்களின் கட்டிடங்களுக்குத் தேவையான சகலவித இரும்புச் சாமான்களும் ஆயுதச் சாமான்களும், தீந்தை வார்னிஸ், டிஸ்ரம்பர் முதலியனவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

*பிரசித்திபெற்ற*
**விங்கெட் பம்பு விற்பனையாளர்கள்**
விபரங்கட்கு ஒருமுறை விஜயஞ்செய்யுங்கள்.

**சண்முகம் ஸ்ரோர்ஸ்**
222, ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம்.

---

## *P. Visuvanathan*

**Radio & Electricals**

**விசுவநாதன்**

றேடியோ திருத்தும் இடம்.
வலிமேற்கில் சிறந்த ஸ்தாபனம்

◉ குறைந்த செலவில்

◉ நிறைந்த முறையில்

இன்றே விஜயஞ் செய்யுங்கள்

---

Phone: 578 போன்: 578

For

BEST MEALS & COOL DRINKS
Icy Chocs, Fresh Milk, Sherdets,
Ice Cream, Short Eats Etc

## "SUBHAS CAFE"

*Proprietor:* **A. SANGARAN**

எங்களிடம் பலவிதமான சிற்றுண்டிகள், ஐஸ்கிறீம, ஐஸி சொக்ஸ், குளிர்ந்தபானங்கள் எந்தநேரமும் கிடைக்கும்.

**"சுபாஸ் கபே"**
176, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.